# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் | வெள்ளி, செப்டம்பர் 06 இதழ் - 78








### ஆயிரம் கருத்துக்களுக்கு தளமமைப்போம்!

நாம் கடந்த காலங்களில் கூறிவந்தது போல எமது அரங்கம்

பக்கம் - 03



### கிழக்கு மக்களை கைவிட்ட புத்திஜீவிகள்

பொதுவாக மனிதர்கள் எல்லோரும் புத்தி உள்ளவர்கள்தான்.

பக்கம் - 04



### (ஏ)மாற்றம் கண்ட கிழக்கிலங்கைத் தமிழர்கள்

பக்கம் -06



### பாடசாலைகளுக்கு அண்மையில் வீட்டுத் திட்டம் : பாடசாலைக்கு நன்மையே!

பக்கம் -07



# சஜித் பிரேமதாசவின் பேரணி- ரணில் புறக்கணிப்பு

நி.அமிர்தஸன் ---

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்குமாறு வலியுறுத்தி அமைச்சர் சஜித் பிரேமதாச குருநாகலில் ஏற்பாடு செய்துள்ள பேரணியில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். வியாழக்கிழமை பிற்பகல் ஆரம்பமான பேரணியில் கலந்துகொண்ட மக்கள் சஜித் பிரேமதாசவை வேட்பாளராக அறிவிக்குமாறு கோசமெழுப்பினர்.

ஆனால் இந்தப் பேரணி ஐக்கிய தேசியக் கட்சியினுடையதல்ல என்றும் சஜித் பிரேமதாசவின் தனிப்பட்ட மக்கள் பேரணி எனவும் கட்சியின் மூத்த உறுப்பினர் அமைச்சர் ரவி கருணாநாயக்கா கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

## தமிழ் முஸ்லிம் கட்சிகளைச் சந்திக்க ஏற்பாடு

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலைவிட எல்லிபிட்டி பிரதேச சபைத் தேர்தலில் கவனம் செலுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் மத்திய குழு

தொடர்ச்சி பக்கம்..02

# போராடிக்கொண்டிருக்கும் கனகர்கிராம மக்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டுகோள்



(காரைதீவு நிருபர் சகா)

‘கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக தமது காணியை மீட்டுத்தருமாறு கோரி போராடிக்கொண்டிருக்கும் பொத்துவில் கனகர் கிராமமக்கள் உரிய ஆவணங்களை விரைவாகச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் காணிவிடுவிப்பிற்கு உதவியாகவிருக்கும்.’ இவ்வாறு பொத்துவில் பிரதேசசெயலாளர் இராசரெத்தினம் திரவியராஜ் தெரிவித்தார். இவை குறித்து கேட்கப்பட்ட போது அவர் மேலும் கூறுகையில்:

‘அங்கு ஏலவே வீடமைப்புத்திட்ட 30வீடுகளில் வாழந்த குடும்பங்களுக்கு காணியை விடுவிப்பதில் தடையொன்றும் இல்லை. அதேவேளை ஏனைய 172 குடும்பங்களுக்கும் காணியை விடுவிப்பதற்கு வனபரிபாலனத் திணைக்களம் ஆவணங்களைக்

தொடர்ச்சி பக்கம்..02


## கடை வாடகைக்கு!

மட்டக்களம்பு, திருமலை வீதியில் இருந்து 50 மீற்றர் இடைவெளியில், 7 A , செல்வநாயகம் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட 3 கடைகள் வாடகைக்கு உண்டு.

2000 சதுர அடி பரப்பைக் கொண்டவை.

மலசல, குளியல் அறை மற்றும் வாகன தரிப்பிட வசதி உடையவை.

களஞ்சிய அறை, காட்சிசாலை, காரியாலயம், சுப்பர் மார்க்கட் மற்றும் தேவைக்கேற்ப வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருத்தமானது. வாடகை பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்பு : 076 3119970 / 077 851730






## வீடு விற்பனைக்கு

மட்டக்களப்பு கருவப்பங்கேணி ஜெயந்தி வீதியில், 15 பேச்சர்ஸ் உறுதிக்காணியில் அமைந்துள்ள தரமான வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

077 0558611, 077 4680354

# என்ன பாவம் செய்தோம் நாம்?



மட்டக்களப்பு என்றாலே தினமொரு போராட்டமும் தினமொரு பிரச்சனைகளும் என்றாகிவிட்டது. என்ன பாவம் செய்தார்களோ இம்மக்கள்? பிரச்சனைகள் இம்மக்களைத் தேடித் தேடி வந்து கொண்டேயிருக்கின்றன. தாழங்குடாவில் 83, 90 ம் ஆண்டுகளுக்குப் பின் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு வந்த மக்களையும் காணியற்ற வறிய மக்களையும் அரவணைத்து ஆதரவளித்து மட்டக்களப்பு ஆயரகத்திற்கு சொந்தமான காணியில் எகெட் நிறுவனத்தால் வீடுகளும் கட்டிக் கொடுத்து முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் மக்களை யாரோ தங்கள் காணி என கொடுத்த புகாரின் பேரில் நீதிமன்ற கட்டளையை கொண்டு அளக்க முற்படுகிறார்கள்.

எகெட் வீட்டுத் திட்டம் எனும் பெயரால் அழைக்கப்படும் மாந்தோட்டம் எனும் இப்பிரதேசத்தில் ஐம்பது குடும்பங்களுக்கு


வ.ச.முரளிசேகரன்

மேல் இப்பிரச்சனையை எதிர் நோக்குகின்றனர்.

உண்மையில் என்ன நடக்கிறது என்று அம்மக்களுக்கே புரியவில்லை. தேடிச் சென்றபோது சில விடயங்கள் புலனாகின. இன்று முஸ்லிம்கள் சிலர் உரிமை கோரி, நீதிமன்ற கட்டளை எனும் பெயரில் தட்டச்சு செய்யப்பட்ட கடிதமொன்றை இலட்சனை ஏதும் பொறிக்காமல் மாலை அல்லது இரவு வேளைகளில் ரகசியமாக முஸ்லிம் நபர் ஒருவர் ஒட்டி விட்டுச் செல்கிறார். பொலிசில் முறையிட்டாலும் இக்கடிதத்தைக் கொண்டு யார் மீது நடவடிக்கை எடுப்பது என்று கையை விரிக்கின்றனர்.

பழைய உறுதியை எடுத்துக் கொண்டு ஒரு முஸ்லிம் நபர் உரிமை கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார். அதேவேளை இதனை ஒட்டியதாக பதினைந்து பதினாறு ஏக்கர் காணி அக்குறனையைச் சேர்ந்த இரு முஸ்லிம் சகோதரர்களுக்கு இருந்திருக்கிறது. அதில் சில பகுதிகளை தானே ஆட்சி உறுதி முடித்து குமாரதேவி குலசேகரம் எனும் பெண்மணி விற்றுள்ளார். பின் அதில் ஒரு சகோதரர் வந்து கைமீறிப் போய் விட்டதை உணர்ந்து வாங்கியவர்களிடம் தரகர் ஒருவரை பயன்படுத்தி மேலதிகமாகப் பணத்தைப் பெற்று தானும் எழுதிக் கொடுத்து விட்டுச் சென்றுள்ளார். இவ்விபரங்களை நன்கு அறிந்து கொண்ட காத்தான்குடியைச் சேர்ந்த முகைதீன் பாவா முகம்மது, விடுதிவீதி, காத்தான்குடி, முகம்மது அலி முகம்மது ,385 ஊர் வீதி,காத்தான்குடி, வழக்கு இல..6532/18 , எனும் இருவர் பழைய ஆவணங்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டு அப்பிரதேசம் முழுவதையும் உரிமை கோரி அதனை அளப்பதற்கு நீதிமன்ற அனுமதியை கோரியுள்ளனர். இது ஒல்லிக்குளம் வரை செல்கிறது. இது நடைபெறுமாயின் அப்படியே பாத்திமா புரம், ஒல்லிக்குளம் பகுதிகளுடன் இணைந்ததாக ஒரு பாரிய முஸ்லிம் பிரதேசம் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டதோ எனும் சந்தேகம் வலுக்கிறது. இவர்கள் அளக்க முற்படும் இப் பிரதேசம் வணக்கத்திற்குரிய பாதர் சொய்சா அவர்களால் 1986ம் ஆண்டு பணம் கொடுத்து ஒரு முஸ்லிம் நபரிடமிருந்து வாங்கப்பட்டது. பின் பாதர் சில்வெஸ்டர் எகெட் நிறுவனத்தை பொறுப்பேற்ற பின் பாதிக்கப்பட்ட, வறிய மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து

அதற்குரிய காணிகளையும் கையளித்தார். அதற்குரிய ஆவணங்கள் அம்மக்களிடம் உள்ளன. அதனைவிட இன்றுவரை மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு முறையாக சோலைவரியை கட்டிக்கொண்டு வருகிறார்கள். தொலைபேசி, மின்சாரம் போன்றவற்றை பெற்றிருக்கிறார்கள். எகெட் வீடுகள் சில மாளிகைகளாக மாறியுள்ளன.



52 வயது பெண்மணி கூறுகிறார். ஐம்பது வருடங்களாக இவ்விடத்தில் தான் இருக்கிறேன் என்று. பாதர் சொய்சா கொள்வனவு செய்தது முதல் இன்று வரை அனைத்து ஆவணங்களும் முறையாக தம்மிடம் உள்ளதாக இப்பிரச்சனைகளை கையாளும் பாதர் சுலக்சன் தெரிவித்தார். அனைத்து ஆவணங்களும் சட்டப்படி நேர்மையாகவும் உண்மையாகவும் சரியாகவும் உள்ளது. இவைகளையும் மீறி ஏதோவொரு மறைமுககரம் தொழிற்படுகிறது.

16/03/2019, 16/05/2019, 25/08/2019 ஆகிய மூன்று தினங்களில் நீதிமன்ற கட்டளை என்று கொண்டு இம்மக்களின் காணிகளை அளக்க முற்பட்டு, இருதடவைகள் மக்களின் எதிர்ப்பினால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது. இதுதான் எல்லை என இனந்தெரியாத நபர்கள் காட்டி விட்டு ஒளித்துக் கொண்டார்கள். அக்குறணை முஸ்லிம் இரு சகோதரர்களுக்கு உரிய காணியையும் ஆயர் இல்லத்திற்கு சொந்தமான காணியையும் காத்தான்குடியைச் சேர்ந்த இரு நபர்கள் எவ்வாறு உரிமை கோர முடியும்? இது தொடர்ச்சியாக இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இருந்த காணி, இவ்வளவு காலமாக ஏன் யாரும் உரிமை கோரவில்லை. தற்போது பொலிஸ் பாதுகாப்புடன் அளக்க முற்படுகிறார்கள். பொலிசைக் கண்டவுடன் மக்கள் அச்சம் அடைந்துள்ளார்கள். சும்மா அளக்கவும் விட முடியாது. தங்களுக்கு சற்றுத் தள்ளி இவ்வாறு அளந்து விட்டு அந்தவீடுள்ள காணி தங்களது என்று வழக்கு தொடுத்துள்ளார்கள். மக்களின் சந்தேகமும் அச்சமும் நியாயமானதே! நாடளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன், முன்னால் மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் செயலாளர் பூ.பிரசாந்தனையும் தவிர யாரும் அம்மக்களை போய் பார்க்கவும் இல்லை, நம்பிக்கை கொடுக்கவும் இல்லை. மக்கள் தான் வீதியில் இறங்கிப் போராட வேண்டும்.

இதில் ஆயர் இல்லம் உறுதியாக உள்ளது. எனினும் பாதகமாக எதுவும் நடக்காது என்று யாரும் உறுதி கொடுக்க முடியாதளவிற்கு பலமான கை ஒன்று உள்ளது. மக்களின் உரிமைக்காக ஓங்கி ஒலிக்கவேண்டிய காலம் தொடரத்தான் செய்கிறது. பாவம் மக்கள். வாக்குப்போட மட்டும்தான் அவர்கள் தேவை.

---

தொடர்ச்சி...

## வதங்கிடுமே....

எத்தனை வழிமுறைகள் இந்த பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன? இவற்றையெல்லாம் செய்யாமல் மக்களின் உயிராதாரமான நீரை வெறும் வர்த்தக முயற்சிகளுக்கு வாரி வழங்கிவிட்டு வாழாதிருத்தல் கூடாது. பிரதேச சபையின் ஆட்புல எல்லைக்குள்ளான நீர் முகாமைத்துவம்(water management) என்பது மக்களுக்கான நீராதாரத்தை உறுதி செய்வதும் நிலத்தடி நீரை பாதுகாக்கின்ற வகையிலான நீர் நிலைகளை பேணுதலும் போஷித்தலுமேயன்றி நீரை வர்த்தகம் செய்வதற்கான உரிமைச் சீட்டுக்களை வழங்குவதல்ல என்பதனை எமது பிரதேச சபையினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்போதே வரட்சியற்ற காலங்களின்கூட வாழைச்சேனை பிரதேசத்தில் உள்ள சில கிணறுகளின் நீர் மட்டம் குறைந்து வருவதாகவும் சில கிணறுகளில் நீர் வெண்ணிறமானதாக மாறி வருவதாகவும் அப்பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். எனவே வாழைச்சேனையில் பெருகி வரும் ஐஸ் உற்பத்தி நிலையங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட அனுமதிகளை படிப்படியாக இரத்து செய்வதும் பற்றி பிரதேச சபையினர் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

மாறாக செயற்பட்டோமானால் காலப்போக்கில் எமது பிரதேசங்கள் பாலைவனங்களாக மாறிவிடும் என்கின்ற எச்சரிக்கைகளை யாரும் இலகுவானதாக கடந்து செல்ல முடியாது. ஏனெனில் மூன்றாம் உலக போரென்பதுதண்ணீருக்கானதாகவே இருக்கும் என்கின்ற எதிர்வு கூரல் பொய்யானதல்ல.

மனிதனது இயற்கையை அரவணைத்து செல்லமுடியாத கண்முடித்தனமான செயற்பாடுகளால் இந்தியாவின் புண்ணிய நதிகள் என்றும் தீரா நோய்களையும் தீர்க்கும் வல்லமை கொண்ட மருத்துவ தன்மை வாய்ந்தவை என்றும் போற்றப்பட்ட கங்கை, ஜமுனை, காவேரி அனைத்துமே இன்று இறந்த நதிகளாகி விட்டன. உலக புகழ் கொண்ட லண்டன் நகரில் ஓடும் ஜேம்ஸ் நதி இறந்த நதியாகவே அறிவிக்கப்பட்டாகிவிட்டது. பாரத மாதாவின் தெய்வீக நதியென புகழப்பட்ட சரஸ்வதி நதி இருந்த தடயங்களே இன்று இல்லை. அப்படியொரு நிலைமை களப்புகளால் நிறைந்த எமது மீன்பாடும் தேனாட்டுக்கும் வந்துவிடக்கூடாது.

---

தொடர்ச்சி...

## போராடிக்கொண்....

கோரியுள்ளது.

தம்மிடம் அரசகாணியோ குடியிருப்புக்காணியோ இல்லை என்ற ஆவணத்தை கிராமசேவையாளர், பிரதேசசெயலாளர் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்குமாறு வனபரிபாலனத்தி ணைக்களம் எம்மைக் கோரியுள்ளது. எனவே பொதுமக்கள் குறித்த ஆவணத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும். அதற்கு தமது வேண்டுகோளை தமது கிராமசேவையாளரிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கவேண்டும்.

---

தொடர்ச்சி...

## சஜித்.....

உறுப்பினர்களிடம் கேட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே சஜித் பிரேமதாசவை வேட்பாளராக அறிவிக்குமாறு குருநாகலில் மாபெரும் பேரணி ஒன்று வியாழக்கிழமை நடைபெற்றது. ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசவின் பெயரை பிரேரிக்க முடியாதென ரணில் விக்கிரமசிங்க புதன்கிழமை இரவு கொழும்பில் இடம்பெற்ற மூத்த உறுப்பினர்களுடனான சந்திப்பில் கூறியதாகக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் அனுமதியின்றி மக்கள் பேரணிகளை சஜித் பிரேமதாச நடத்த முடியாதெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் என்ற முறையில் தனிப்பட்ட முடிவுகளை எடுக்க முடியாதெனவும் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பேரணியில் பங்குபற்றுமாறு சஜித் பிரேமதாசவின் ஆதரவாளர்கள் விடுத்த அழைப்பை ரணில் விக்கிரமசிங்க புறக்கணித்துள்ளதாகவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையகத் தமிழ் கட்களை ரணில் விக்கிரமசிங்க சந்தித்து ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக உரையாடுவாரென்றும் அதன் பின்னரே வேட்பாளர் யார் என்பது குறித்து அறிவிக்கப்படுமெனவும் கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

---

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் - 90 சதவீதமானவர்களுக்கு இழப்பீடு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயங்களுக்கு உள்ளானவர்களில் 90 சதவீதமானவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இன்று சபையில் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரிகல்ல, தேவையாயின் பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை இது தொடர்பாக நடத்துவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 264 பேருக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் இழப்பீடு வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. 20 பேருக்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் இழப்பீட்டை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இதே போன்று காயங்களுக்கு உள்ளானவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் இழப்பீட்டை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. 101 பேரின் தகவல்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இதில் 56 பேருக்கே இழப்பீடு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆயிரம் கருத்துக்களுக்கு தளமமைப்போம்!

நாம் கடந்த காலங்களில் கூறிவந்தது போல எமது அரங்கம் பத்திரிகை கிழக்கு மக்களின் விவகாரங்களை அவர்களுக்காக பேசும் விடயத்தில் மிகவும் காத்திரமாகச் செயற்பட்டு வருகின்றது என்பது எம்முடன் பேசும் பலரது கருத்தாகும்.

அதேவேளை, அரங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை கிழக்கில் பிரச்சினைகளின் எண்ணிக்கையும் அதிகரித்தே வருகின்றன. அவைபற்றி எம்மால் முடிந்தவரை பலவிதமான கலந்துரையாடல்களுக்கு நாம் இங்கு களமமைத்து வருகின்றோம். இந்த களத்தை எந்த தரப்பினரும் தமது நியாயமான கருத்துக்களை முன்வைக்க பயன்படுத்த முடியும்.

ஓரளவுக்கு அரங்கத்தின் இந்தத் தளத்தை பலரும் பயன்படுத்தியும் வருகின்றனர்.

அதேவேளை கிழக்கின் அண்மைய நிலைமைகளை பிரதிபலிக்கும் வகையில் ஒரு தரப்பினரை மாத்திரம் விமர்சிக்கும் ஆக்கங்கள் இங்கு அதிகரித்திருப்பதையும் நாம் அவதானிக்கிறோம்.

இதனை சமன் செய்ய வேண்டியதும் பலவிதமான கருத்துக்களுக்கும் சமதளத்தை முன்வைப்பதும் எமது கடமை என்பதையும் நாம் உணருகின்றோம்.
அப்படியான நிலைமையே பொதுமக்கள் மத்தியில் நியாயமான ஒரு விழிப்புணர்வுக்கு வழி செய்யும். பெரும்பான்மையான மக்கள் ஒரே கருத்தைக் கொண்டிருப்பது ஒரு பக்க கருத்துக்கள் அடிக்கடி ஊடகங்களில் வருவதற்கு காரணமாகிவிடுவது வழக்கம்.

ஆனால், அதனையும் தாண்டி மாற்றுக்கருத்துக்களுக்கும் இடமளிக்க வேண்டியது ஊடகத்தின் கடமை. அதனை நாம் முடிந்தளவு நியாயமாகவே செய்து வருகின்றோம். அதுவே நியாயமான கருத்தாடலுக்கான போக்கை உருவாக்கும் என்பதையும் நாம் உணர்ந்திருக்கின்றோம். அந்தத் திசையை நோக்கியே அரங்கமும் பயணிக்க முயல்கிறது.

அதேவேளை, ஒரு ஊடகத்தை சரியாகப் பயன்படுத்துவதில் பொதுமக்களின், வாசகர்களின் பங்கும் மிக முக்கியமானதாகும். இந்த விடயத்தில் அவர்களும் பொறுப்புடன் செயற்பட்டாக வேண்டும்.

தமது சொந்தக் கருத்துகளுக்கு எதிரான அல்லது முரணான கருத்துக்களை காணும்போது அதற்கு மாற்றான தமது கருத்துக்களை அதே ஊடகத்தில் அல்லது அதே தளத்தில் முன்வைப்பதிலும் அவர்கள் மிகுந்த அக்கறை காண்பிக்க வேண்டும்.

அதேவேளை தமது கருத்துக்களை அவர்கள் கௌரவமாக முன்வைக்க வேண்டும்.

இங்கு இந்த விடயமே கொஞ்சம் குறைவாக இருக்கின்றது. பலதரப்பட்ட கருத்துக்களுக்கும் களம் கொடுக்க நாம் தயாராக இருந்தாலும் சில தரப்பு கருத்துக்கள் இந்தக் களத்தில் முன்வைக்கப்படுவது குறைவாக இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

**சீவகன் பூபாலரட்ணம்**

ஆகவே, வாசகர்களே இங்கு கருத்துக்கு முரணான கருத்துக்களை முன்வைக்க தயாராகுங்கள்.

அரங்கத்தில் அதற்கு இடமிருக்கிறது. களம் இருக்கிறது. அதனைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்பதே எமது கோரிக்கை. கருத்துக்கள் வீண் விதண்டாவாதமாக இல்லாமல், தரமாக, நியாயமாக இருந்தால் எமது சொந்தக் கருத்துக்கு முரணாக அது இருந்தாலும் அதற்கு அரங்கத்தில் இடம் தருவோம்.

அவை கௌரமாக, குழப்பமில்லாமல் இருப்பதை மாத்திரம் உறுதி செய்யுங்கள்.

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தனித்தனியாக கருத்து இருக்கும். அதற்கு இடமளிப்பது எமது கடமை.

ஆனால், அதனை சரியாக பயன்படுத்திக்கொள்வது உங்கள் கடமை. அதனைவிட்டு, எமக்கு முரணான கருத்தை மாத்திரமே அரங்கம் பேசுகிறது, அது எங்களுக்கு முரணானது என்று முடிவெடுப்பது தவறு. இது உங்கள் பத்திரிகை, இது உங்களுக்கானது, உங்கள் நன்மையை மனதில் கொண்டது. அதனைப் பயன்படுத்திக்கொள்வது உங்கள் பொறுப்பு.

ஆயிரம் கருத்துக்கள் மலரட்டும். அதுவே சரியான கலந்துரையாடலையும், நியாயமான முடிவுகளையும் எடுக்க வழி செய்யும். எமது முடிவுகளை நாமே தீர்மானிப்போம். எமது எதிர்காலத்தை நாமே நிர்ணயிப்போம்.

# வதங்கிடுமே வாழைச்சேனை- பெருகிவரும் ஐஸ் தொழிற்சாலைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் நுழைவாசலில் அமைந்துள்ளது இந்த வாழைச்சேனை பட்டினம். நீர்வளமும் நில வளமும் மிக்க கல்குடா பிரதேசத்தின் மைய நகர் இதுவாகும். இங்கு நிறைந்து விளையும் வாழைத்தோட்டங்கள் காரணமாகவே இது வாழைச்சேனை எனப் பெயர் பெற்றது. இந்தக் கல்குடா தொகுதியானது பெருந்தலைவர் நல்லையா மற்றும் தேவநாயகம் போன்றோர் பிரநிநிதித்துவம் செய்த தொகுதியாகும். அதேபோன்று கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் சந்திரகாந்தன் கூட இந்த தொகுதியின் பிரதிநிதியாகவே அரசியலில் காலடி பதித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் தலை நகரம் அமைந்துள்ள மட்டக்களப்பு தொகுதி மற்றும் பட்டிருப்பு தொகுதிகளில் உள்ள நகரங்களை விட ஒரு பெருநகரமாக வளரக்கூடிய வாய்ப்பு கல்குடாத்தொகுதியில் அமைந்துள்ள வாழைச்சேனைக்கு உண்டு. காரணம் இங்குள்ள மீன்பிடி துறைமுகமும், இலங்கையின் முதற்தரமான பாசிக்குடா உல்லாச கடற்கரையும், அதையண்டிய ஹோட்டல் தொழிற்துறையும், இங்கு இருந்த காகித ஆலை, அதன் பின்னர் உருவான கிழக்கு பல்கலைக்கழகம் அனைத்துமே ஒரு பெரும் சமூக பொருளாதார மையமாக வாழைச்சேனையை வளர்த்தெடுக்கும் வாய்ப்புக்களை தந்துள்ளன.

ஆனால் அபிவிருத்திகளின் மறுபக்கம் அதன் பிரதிகூலங்களும் உண்டு என்கின்ற விடயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. பாசிக்குடாவை நோக்கி வருகின்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாச பயணிகளை குறிவைத்து பல்வேறு நட்ஷத்திர விடுதிகளும் மதுச்சாலைகளும் இப்பிரதேசத்தில் பெருகி வருகின்றன. அதேபோல மீன் பதனிடுதல் மற்றும் ஹோட்டல்களின் தேவைகள் போன்ற வியாபாரங்களை ஒட்டி பலவிதமான ஐஸ் உற்பத்தி தொழிற்சாலைகளும் இங்கே உருவாகி வருகின்றன. ஏற்கனவே வாழைச்சேனைக்கு அண்மையிலுள்ள கும்புறுமூலை எதனோல் தொழிற்சாலை (தற்காலிகமாக இதன் கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன). வாகரை இல்மனைட் தொழிற்சாலை போன்றவற்றால் சுரண்டப்படப்போகின்ற நில, நீர் வளங்கள் பற்றிய அச்சங்கள் நிறைந்துள்ளன. மேலும் இந்த ஐஸ் உற்பத்தி நிலையங்களால் இப்பிரதேசம் விரைவில் தண்ணீர் பஞ்சத்துக்குள் தள்ளப்படும் ஆபத்துக்களை எதிர்கொண்டுள்ளது.

பொதுவாக அனைத்து தொழிற்சாலைகளிலும் மூலப்பொருட்களுடன் இணைந்தே தண்ணீர் பயன்படுத்தப்படும். ஆனால் ஐஸ் தொழிற்சாலைகளின் மூலப்பொருளே தண்ணீர்தான் என்கின்றபோது நீர் அளவு கணக்கின்றி செலவிடப்படுமென்பது உறுதி. இதனால் இத்தொழிற்சாலைகளை சுற்றியுள்ள பிரதேசங்களில் உள்ள நிலத்தடி நீரின் மட்டம் அதலபாதாளத்தை நோக்கி செல்லும். இதன்காரணமாக பொதுமக்களின் பாவனையில் உள்ள கிணறுகள் வற்றி வறண்டு போவதும் நிகழும். காலப்போக்கில் கிணறுகள் மட்டுமன்றி சுற்றுவட்டாரங்களில் உள்ள களப்புகள், குளங்கள், தோணாக்கள் போன்ற நீர்நிலைகள் கூட வறட்சியை அடைய நேரிடும்.

ஓரிரு முதலாளிகளின் வருவாய்களை அதிகரிப்பதற்காக பல்லாயிரம் பொது மக்களின் உயிராதாரமான நீருடன் நாம் விளையாட முடியாது. நீர் என்பது மனிதர்களுக்கு மட்டும் முக்கியமானதல்ல. புல்லோ பூண்டோ, புழுவோ, மரமோ, பல்மிருகமோ, பறவையோ, பாம்போ, அனைத்துக்கும் நீரென்பதே உயிராதாரமானதாகும்.

இதன்காரணமாகவே நிலத்தடி நீரை அடிப்படையாக கொண்டியங்கும் மென்பான தொழிற்சாலைகளையும் தண்ணீரை

**அறுமக்குட்டி போடி**

மாசுபடுத்தும் தொழில் சாலைகளையும் நிறுவனங்களையும் மூடிவிடுமாறு கோரும் விழிப்பு கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் வீதி ஊர்வலங்களும் உலகம் தழுவிய வகையில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. உலகிலுள்ள பெருநகரங்கள் அனைத்தும் தமது நகர எல்லைகளுக்குள் வாழும் மக்களேயானாலும் தத்தமது சொந்த நிலங்களில் இருந்துகூட அன்றாட தேவைக்கான நீரை பெற்றுக்கொள்வதற்கு தடை விதித்துள்ளன. பொது நீர் வழங்கல்கள் ஊடாகவே மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றது. அந்த அளவு தூரத்துக்கு நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கான முயற்சிகளில் உலக நாடுகள் இறங்கியுள்ளன.

ஆனால் நாமோ நிலத்தடி நீரை வர்த்தக மயப்படுத்தும் உரிமையை மிக இலகுவாக அனுமதித்துக்கொண்டிருக்கின்றோம். வாழைச்சேனை பிரதேச சபை அமைந்துள்ள இடத்திலிருந்து வெறும் 500 மீட்டர் தூரத்துக்குள்ளாகவே இரண்டு ஐஸ்உற்பத்தி தொழிற்சாலைகள் உள்ளன. லங்கா ஐஸ் பெக்டரி,ஈஸ்டர்ன் ஐஸ் பெக்டரி என்னும் இந்த தொழிற்சாலைகள் வாழைச்சேனை இந்து மயானம் முன்பாக அமைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி வாழைச்சேனை பலநோக்கு கூட்டுறவு சங்கம் முன்பாக நிலத்தடி நீரை உறுஞ்சி போத்தல்களில் அடைத்து விற்பனை செய்கின்ற நிலையம் ஒன்றும் செயற்பட்டு வருகின்றது.

சுங்கான்கேணி மதுபான நிலையம் முன்பாக கூல் மேன் ஐஸ் பெக்டரி என்னும் பெயரில் ஒரு தொழிற்சாலை உள்ளது. இந்நிலையில் இதற்கு 400 மீற்றர் இடைவெளிக்குள்ளேயே இன்னுமொரு ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை அமைப்பதற்கான கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வயற்காணிகளாக இருந்த இந்த நிலங்கள் நீரை வர்த்தக பொருளாக மற்றும் தொழிற்சாலைகளாக மாறிவருவது வேதனைக்குரியதாகும். வாழைச்சேனை பிரதேச சபையினர் இவற்றுக்கான அனுமதிகளை எந்த அடிப்படையில் எவ்வித மறுப்புகளுமின்றி வழங்கி வருகின்றார்கள்?

இவ்வாறான வழிகளில் உறிஞ்சப்படும் நிலத்தடி நீரை மீள பதிலீடு செய்வதற்கான சுழற்சிமுறை நீர் முகாமைத்துவம் பற்றி பிரதேச சபையினர் எவ்வளவுதூரம் கரிசனை கொண்டுள்ளனர்? மழை காலங்களில் பள்ளம் படுகுழிகளில் நிரம்பி ஆவியாகி போகின்ற நீரை நிலத்தடி நீராக சேமிக்கும்

தொடர்ச்சி பக்கம்..02

# கிழக்கு மக்களை கைவிட்ட புத்திஜீவிகள்

பொதுவாக மனிதர்கள் எல்லோரும் புத்தி உள்ளவர்கள்தான். ஆனால் எமது சாதாரண உரையாடலில் 'புத்திஜீவிகள்' என்போர் அறிவை உருவாக்கிப் பரப்புபவர்களையும் அறிவைக் கொண்டு தொழில் செய்து உழைப்பவர்களையும் குறிக்கின்றது.

புத்திஜீவிகளைக் கொண்டிருக்கின்ற ஒரு சமூகம், கல்வி, சுகாதாரம், அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நலன்புரிவிடயங்களில் முன்னேற்றகரமான ஒரு சமூகமாக இருப்பது உலகில் பொதுவான ஒரு விடயமாகும். புத்திஜீவிகள் ஒரு நாட்டின் செல்வமாக மதிக்கப்படவேண்டியவர்களாக உள்ளனர். இதனால்தான் தங்கள் நாட்டிலிருந்து புத்திஜீவிகள் வெளியேறுவதை அந்தந்த நாடுகள் விரும்புவதில்லை. செல்வம் மிக்க நாடுகள் வேறுநாடுகளில் இருந்து தமது நாட்டுக்கு புத்திஜீவிகளை வரவழைத்து அவர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுத்து குடியேற்றுகின்றன. இதனை அந்த நாடுகளின் நிலையான அபிவிருத்திக்கு ஒரு வழிமுறையாகக் கையாழ்கின்றன.

கிழக்கைப் பொறுத்தளவில் புத்திஜீவிகள் எனப்படுவோர் பல்கலைக்கழகத்தில் கல்விசார் பணியில் இருப்பவர்களையும் தொழில் வல்லுனர்களாக இருக்கும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், உயர் நிர்வாக உத்தியோகத்தர் போன்றோரையும் குறிப்பிட முடியும்.

இவர்களுடைய பிரசன்னம் கிழக்கின் அரசியல், சமூக, பொருளாதார, நலன்புரி விடயங்களில் எந்தளவு தாக்கம் செலுத்தியிருக்கின்றது என்பது முக்கியமான ஒரு கேள்வியாகும். தற்போது எல்லாவற்றுக்கும் அரசியலைக் குற்றம் சாட்டுகின்ற நாம், எமது புத்திஜீவிகள் தங்களுடைய பணியை கிழக்கு மக்களுக்காக செய்துள்ளார்களா என்பதை ஒவ்வொரு புத்திஜீவிகளும் தங்களை சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இந்தச் சுயபரிசோதனை எமது சமூகத்தை தனது சொந்தக் காலில் நிறுத்துவதற்கு உதவியானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இலவசக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்படும் வரை காலனித்துவக் கல்விமுறைக்கு இந்தச் சமூகம் பெரிதளவுக்கு உள்ளீர்க்கப்படாததற்குக் காரணம் இம் மாகாணத்தில் இருக்கின்ற வளங்களேயாகும். உணவுக்குப் பஞ்சமில்லாத இந்த மாகாணத்தில் எவரிடமும் கையேந்த வேண்டிய நிலை இம் மாகாண மக்களுக்கு இருக்கவில்லை. ஆனால் தற்போது இலங்கையில் அரசியல், சமூகப் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாகாணமாக கிழக்கு உள்ளதை இந்த மாகாணத்திலுள்ள புத்திஜீவிகள் நன்கு அறிவார்கள்.

பல்கலைக் கழகப் புத்திஜீவிகள் அந்தந்த மாகாண வளங்களைக் கணக்கில் எடுத்து கலைத்திட்டங்களை வடிவமைக்கவோ கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவோ தெரியவில்லை. உலகவங்கியின் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்ப சூழலுக்குப் பொருத்தமற்ற ஒரு கல்விமுறையே பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படுகின்றது. இது இயந்திரத்தனமாக பட்டதாரிகளை உருவாக்கி சமூகத்துக்கு மேலும் சுமையினை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது. அறிவு, வளம், உற்பத்தி என்பவற்றுக்கிடையில் பாரம்பரிய சமூகத்தில் இருப்பது போன்று ஒரு உறவு இல்லாது இவற்றுக்கிடையில் மிகப்பெரிய இடைவெளி ஏற்படுத்துவதாக பல்கலைக் கழக கல்விமுறை இருப்பதை எமது புத்திஜீவிகள் கனத்தில் எடுத்தக்கொள்வதாகவும் தெரியவில்லை.



அந்தவகையில் கிழக்கின் மனிதவளம் எந்தளவுக்கு செம்மைப்படுத்தப்பட்டு உற்பத்திப் போக்குடன் இணைக்கப்படுகிறார்கள் என்பது முக்கியமாகும்.

மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசம் என்றழைக்கப்படும் பிரதேச மக்களின் பிள்ளைகளுக்கு இலங்கையிலுள்ள எல்லாப் பிள்ளைகளையும் போல சமத்துவமான ஆரம்பக் கல்வி வழங்கப்படுவதில்லை என்பதை கிழக்கிலுள்ள எத்தனை புத்திஜீவிகள் அறிந்துள்ளார்கள் என்பது கேள்விக்குறியே. இந்த நிலையில் அவர்களின் இடைநிலைக் கல்வி, உயர் கல்வி என்பன சாத்தியமற்ற ஒன்றாகி விடுகின்றது. கல்வியறிவின்மை காரணமாக அவர்களின் உற்பத்திப் படைப்பாற்றல் வெளிப்படுத்தப்படாமல் வெறும் உழைப்புக்கருவியாக உருவாக்கப்படுகிறார்கள். இதற்கு சிறந்த உதாரணமாக அண்மைக்காலமாக வாகரையில் ஓர் அரசசார்பற்ற இலாபம் ஈட்டும் நிறுவனம் சில கிராமங்களைத் தெரிவு செய்து சிறுதொகைக் கடன்களைக் கொடுத்து பிப்பிங்காய் உற்பத்தியை மேற்கொள்கின்றது. அந்தக் கிராம மக்கள் பிப்பிங்காயை விட வேறெதுவும் உற்பத்திசெய்யக் கூடாது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பிப்பிங்காய்களை குறித்த நிறுவனத்தைத் தவிர வேறெவருக்கும் விற்பனை செய்யவும் கூடாது. குறித்த நிறுவனம் மிகக்குறைந்த விலையில் பிப்பிங்காயைக் கொள்வனவு செய்து மிகக் கூடிய விலைக்கு விற்பனை செய்கின்றார்கள். இங்கு அந்த நிறுவனத்தின் கொத்தடிமைகளாக அந்தக் கிராம மக்கள் உள்ளார்கள் என்பதனை அந்தக் கிராம மக்களும் சரி மட்டக்களப்பிலுள்ள புத்திஜீவிகளும் சரி அல்லது அரசியல் தலைவர்களும் சரி உணர்வதாக இல்லை.

எங்கோ இருந்து வந்த நிறுவனம் இந்த வளங்களை அடையாளம் கண்டு எமது மக்களைச் சுரண்டும் போது இங்குள்ள புத்திஜீவிகள் இந்த வளங்களை அடையாளம் கண்டு அந்த மக்களை படைப்பாற்றல் மிக்க சுய உற்பத்தியாளர்களாக உருவாக்கி தன்னிறைவான விவசாயக் கிராமங்களாக அவற்றை உருவாக்க முடியும். ஆனால் எமது புத்திஜீவிகள் இவ்வாறான மக்கள் பணிகளை செய்வதற்கு விரும்புவதில்லை.

இது போன்றே இங்குள்ள இயற்கை வளங்களான குளங்கள், ஆறுகள், கடல் போன்றவற்றிலிருந்து உச்ச பயனைப் பெறுவதற்கான எந்தவிதமான தொழில்நுட்ப அறிவும் எமது புத்திஜீவிகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. பெருமளவு கடல்வளத்தைக் கொண்டிருக்கும் கிழக்குத் தமிழர்களில் ஒரு சிறு தொகையினரே மீன்பிடித்தொழிலை மேற்கொள்பவர்களாக இருக்கின்றார்கள். இந்தக் கடல்வளத்தை பெருமளவு பயன்படுத்துபவர்களாக முஸ்லிம்களும் சிங்களவர்களும் காணப்படுகின்றனர். இது போன்றே ஆறு, குளம் என்பற்றையும் உற்பத்தி குன்றாத வளம் உள்ள ஒன்றாக வைத்திருக்கும் விலங்கு வேளாண்மைத் தொழில்நுட்பங்களை அறிந்தவர்களாகவோ அல்லது அவற்றைக் கண்டுபிடிப்பவர்களாகவோ எமது புத்திஜீவிகள் இல்லை. அயல்நாட்டில் சிறு சிறு குளங்களை வைத்துக் கொண்டு கூட்டுப் பண்ணைமுறையினை வெற்றிகரமாக மேற்கொண்டு கூடிய இலாபமீட்டும் போது எமது மக்கள் பெரும் பெரும் குளங்களை தனியே நெற்செய்கைக்கு மாத்திரம் பயன்படுத்தி வறுமையில் வாடுவது துரதிஸ்டவசமானதாகும்.

நிலப் பயன்பாட்டிலும் மிக மோசமான நிலையில்தான் உள்ளோம். கிழக்கில் பெருமளவான நிலங்கள் தமிழர் பிரதேசங்களுக்குரியதாக இருப்பதுவும் ஒரு பிரச்சினையாக சிங்கள, முஸ்லிம் சமூகத்தினரால் பார்க்கப்பட்டு அபகரிக்கப்படுகின்றது. வயல்நிலங்கள், மேட்டுநிலங்கள், மேச்சல் நிலங்கள் என்பவற்றிலிருந்து விவசாயிகள் உச்சபயனைப் பெறுவதாக இல்லை. நான் அறிந்தவரையில் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் களுதாவளையினை ஒரு விவசாய மாதிரிக் கிராமமாக எடுத்துக் கொண்டு தங்கள் ஆராச்சிப் படிப்புகளை மேற்கொள்கிறார்களே தவிர இதுவரைக்கும் கிழக்குப் பல்கலைக் கழகம் விவசாய ஆராச்சிக் கிராமங்களை உருவாக்கியது கிடையாது.

**எழுவான் வேலன்**

இவ்வாறு கிழக்கிலுள்ள எந்த ஒரு வளத்தின் பயன்பாடு பற்றிய எவ்வித அக்கறையுமின்றி ஆராச்சி மகாநாடுகளை நடாத்தி தமது பதவி உயர்வுகளையும் ஆராச்சிக் கொடுப்பனவுகளையும் கறாராகப் பெறுவதில் மட்டும் எமது பல்கலைக் கழக புத்திஜீவிகள் அக்கறையுடன் தொழில்படுகின்றனர்.

அடுத்து தொழில் வல்லுனர்களாக இருக்கும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், உயர் நிர்வாக உத்தியோகத்தர் போன்ற புத்திஜீவிகள் தமது தொழிலின் ஊடாக மக்களுக்கு எந்தளவு சேவை செய்கின்றோம் என்பதை



விடுத்து அரசியல் அதிகாரத்திற்காக அலைந்து திரிபவர்களாக உள்ளனர். அதற்காக 'ஒன்றிணைந்த தமிழ் மக்கள் கட்சி' என்ற அரசியல் கட்சியினையும் ஆரம்பித்துள்ளார்கள்.

'கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தேடி வரும்' என்றொரு பழமொழியுண்டு இந்தப் புத்திஜீவிகளும் இருப்பது போல் இருந்து சமூகத்தக்கு செய்ய வேண்டியவற்றைச் செய்தால் அவர்களைத் தேடி கட்சிகள் செல்லும் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இந்தப் புத்திஜீவிகள் ஒன்றாகிப் பயணிக்கத் தொடங்கிய காலம் முதல் கிழக்குத் தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளார்கள், காணி அபகரிப்பு, புல்லுமலைத் தண்ணீர்த் தொழிற்சாலை, மட்டக்களப்புத் தேரரின் அடாவடித்தனங்கள், வாகரை இல்மனைற் அகழ்வு, ஆளுநர் நியமனம், கல்முனை பிரதேச செயலக தரமுயர்த்தல், தேவாலயக் குண்டு வெடிப்புக்கள், ஆகக் கடைசியாக தற்கொலைக் குண்டுதாரியின் உடல் கள்ளியங்காடு இந்து மயானத்தில் புதைத்தமை என போராட்டங்களையும் கண்டனங்களையும் ஊர்வலங்களையும் நடாத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மக்கள் போராட்டம் எதிலும் எந்தவிதமான பங்களிப்பினையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வழங்க முடியாத புத்தியை வைத்துக் கொண்டு தங்களைப் புத்திஜீவிகள் என்று கூறுவதற்கு இவர்கள் வெட்கப்படவேண்டும். இத்தனைக்கும் சிரேஸ்ட்ட சட்டத்தரணி என்ற தகமையுடன் கூடிய தலைமை வேறு. இதுவே தங்களுடைய தென்னந்தோட்டங்களை அயலாளர் அபகரிக்கின்றார் அல்லது தென்னந்தோட்டத்துக்கான தண்ணீரைத் தடைப்படுத்துகின்றார் என்றிருந்தால் அவர்களுடைய புத்தி மிகக் கூர்மையாகவும் வேகமாகவும் செயற்பட்டு நீதிமன்றத்தினை நாடி அதற்கான நீதியினைப் பெற்றிருப்பார்கள். தங்களுடைய பிரச்சினைகள் தேவைகள் என்பவற்றுக்கே இவர்களுடைய புத்தி



பயன்படுத்தப்படுகின்றது. அவ்வாறு பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்ற நினைக்கிறார்கள். இது கிழக்குத் தமிழர்களின் அரசிலுக்கு ஆரோக்கியமானது அல்ல என்பதை கிழக்குத் தமிழர்கள் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

ஆகவே முடிவாக கிழக்கிலுள்ள புத்திஜீவிகளில் ஒரு சாரார் தமது அந்தஸ்து கௌரவம் என்பவற்றுக்காக ஆராய்ச்சி மகாநாடுகளையும் வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொண்டு சொகுசுவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மற்றொருசாரார் அரசியல் அதிகாரம் பெற்று மக்களை ஆள்வதற்கான ஆசையுடன் கட்சி ஆரம்பித்து தமது புத்திஜீவித்தனத்தை அதற்குப் பயன்படுத்தி மக்களை ஏமாற்ற முயல்கிறார்கள். ஆக மொத்தத்தில் கிழக்கிலுள்ள புத்திஜீவிகளால் கிழக்கு மக்களுக்கு எவ்விதப் பயனும் இல்லை என்பது தெளிவாகின்றது.



## சொல்லத் துணிந்தேன்! 21

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

அண்மையில் கிழக்கில் பட்டிருப்பு, மட்டக்களப்பு மற்றும் கல்குடாத் தொகுதிகளிலும் அம்பாறை மாவட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் விளக்கவுரைக் கூட்டங்கள் நடந்தேறிய செய்திகளையும் அக்கூட்டங்களில் கேள்விகள் சந்தேகங்களுக்குச் சுமந்திரன் பா.உ விளக்கம் அளித்த ஊடகத் தகவல்களையும் அறிய நேர்ந்த போது பின்வரும் விடயங்கள் என் மனதில் எழுந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக இருந்து 'தர்பார்' நடத்துகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளரான கி.துரைராசசிங்கம் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். தொழில் ரீதியாக ஆரம்பத்தில் ஆசிரியராக இருந்து பின் சட்டத்தரணியானவர். மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் கிழக்கு மாகாணசபை அமைச்சராகவும் பதவி வகித்தவர். இளமைக் காலத்திலிருந்தே தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்.

சுமந்திரனை எடுத்துக் கொண்டால் 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழத் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை இரா. சம்பந்தன் அவர்கள் தன்னிஸ்டப்படி சுமந்திரனுக்கு வழங்கிய காரணத்தால் அதன் பின்னர்தான் தமிழர் அரசியலுக்கு அறிமுகமானவர். 2010ஆம் ஆண்டிற்குப் பின்னரே சுமந்திரனின் பெயர் தமிழர்களுக்குத் தெரிய வந்தது. அதுவரைக்கும் சுமந்திரன் யாரென்றே தமிழர்களுக்குத் தெரியாது. தமிழர் அரசியலைப் பொறுத்தவரை ஒரு வகையில் கூலிக்கு மாரடிக்க வந்தவர்.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது மேற்படி கூட்டங்களில் பங்குபற்றியவர்களின் சந்தேகங்கள், கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வல்லமை துரைராசசிங்கத்திடமோ அல்லது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் முன்னாள் மற்றும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இல்லாத காரணத்தினாலா கொழும்பிலிருந்து சுமந்திரனை இறக்குமதி செய்து, அவரைக் கொண்டு விளக்கங்கள் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது?

தாங்கள் மட்டுந்தான் தமிழ்த் தேசியவாதிகள் என்று தம்பட்டம் அடித்துத் திரிகின்ற இங்குள்ளவர்கள் வெறுமனே 'சோளக் காட்டுப் பொம்மைகள்' தானா?

விடுதலைப் போராட்ட அரசியலில் வேட்டிகூடக் கசங்காதவர்கள் எல்லாம் விளக்கம் கொடுக்க வெளிக்கிட்டிருப்பதுதான் வேடிக்கையாக இருக்கின்றது.

இது ஒரு புறமிருக்க, கொழும்பிலிருந்து கொள்கை விளக்கவந்த சுமந்திரனும் அவருடன் இணைந்து பக்கப்பாட்டுப் பாடிய இங்குள்ளவர்களும் புதிதாக ஏதாவது சொல்லுவார்கள் என்று பார்த்தால் எல்லோருமே அரைத்த மாவையே அரைத்துள்ளனர். 'ஒற்றுமை' - 'சர்வதேசம்' - 'புதிய அரசியல் யாப்பு' என்று கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன பழைய பல்லவிகளையே பாடி ஒப்புவித்துள்ளனர்.

கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் மடையர்கள் என்றா இவர்கள் நினைத்துக் கொண்டார்கள்?தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இனிமேலும்கூட ஏமாற்றலாம் என்றா மக்களை இவ்வளவு தூரம் மலினமாக எடை போட்டுள்ளனர்?

'ஓடுகிறவனைக் கண்டால் துரத்துபனுக்கு இலேசு' என்ற பழமொழி உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனைத்தான் செய்கிறது.

மக்கள் ஏமாறக் காத்திருக்கும்வரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப்பினர் இவ்வாறுதான் அரசியல் விழிப்பூட்டல் என்றும் கொள்கை விளக்கம் என்றும் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றித் தங்கள் மடியை வாக்குகளாலும் ஏனைய வரப்பிரசாதங்களாலும் நிரப்பிக் கொள்வார்கள்.

கிழக்குமாகாணத் தமிழர்கள் எழுபது வருடங்கள் இவர்களை நம்பி ஏமாந்தது போதும்.இனிமேல் அரசியலில் தெளிவானதும் - அறிவுபூர்வமானதும் - யதார்த்தமானதும் ஆன பாதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அரசியலில் இலங்கை முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் வகுத்துக் கொண்ட அறிவுபூர்வமான அரசியல் பாதைகளால் அவர்கள் எய்திய சமூக பொருளாதார அடைவுகள் எம் கண் முன்னே விரிந்து கிடக்கின்றன. அவை நம் அறிவுக் கண்களைத் திறக்கட்டும்.

கிழக்குத் தமிழர்களுக்கு ஏதாவது சமூக பொருளாதார அரசியல் நன்மைகள் ஏற்பட வேண்டுமென்றால் கிழக்கின் அரசியல் அரங்கிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும். ஏனெனில் அவர்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்தினால் 'வைக்கோல் பட்டறை நாய்' போல செய்யவும் மாட்டார்கள், செய்பவனை விடவும் மாட்டார்கள். புல்லை வைத்துக் கொண்டு வயலில் நெல்லை விதைத்துப் பயனில்லை.

எழுபது வருட காலமாக எறிகிற பொல்லைத் தமிழரசுக் கட்சியிடமும் - பின் தமிழர்விடுதலைக் கூட்டணியிடமும் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் தொடர்ந்து கொடுத்து வந்ததால் இதுவரை எதுவுமே நடக்கவில்லை. இவர்களிடம் எறியும் எண்ணமும் இல்லை; எறியும் வல்லமையும் இல்லை. இதுவே எமது எழுபது வருட கால அனுபவம்.

எனவே எதிர்காலத்தில் எறிகிற பொல்லைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர்த்து கிழக்கைத் தளமாகக் கொண்டு மேற்கிளம்புகின்ற ஓர் நல்ல அரசியல் கூட்டமைப்பிடம் (Political Alliance) முழுமையாகக் கையளியுங்கள். கிழக்குத் தமிழர்கள் தங்கள் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளவும் தப்பிப் பிழைக்கவும் இதைத் தவிர வேறு வழியில்லை.

---

# மட்டக்களப்பு மாவட்டம் பண்டாரியாவெளில் அறிவாலயம் அறக்கட்டளையின் மகத்தான கல்விப்பணி




மட்டக்களப்பு பண்டாரியாவெளியில் தலைமைப் பணிமனையை தனது சொந்த செலவில் அமைத்து கல்விப்பணி செய்து வருவபவர் பாரிசில் வாழும் சமூக ஆர்வலர்

அலையப்போடி நல்லரத்தினம். பெயருக்கு ஏற்ப நல்ல சிந்தனைகளையும்,செயற்பாடுகளையும் கொண்டவர்.

தாயகத்தில் போர் தந்த வலிகளில் இருந்து நம்மவர்களை மீட்க பல நிறுவனங்கள் செயற்படுகின்றன. இருந்தும் பாரிசில் இருந்து கொண்டு நல்லரெத்தினம் ஒரு தனிமனிதனாக இந்தப்பணியில் ஈடுபடுவது பாராட்டத்தக்கது.

‘எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது மக்களை கல்வியினால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்’ என்று வலியுறுத்தும் அவர் அதற்காக "அறிவாலயம்” எனும் அறக்கட்டளையைத் தோற்றுவித்து அதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவி வருகிறார். பாரிசில் தமிழ் வர்த்தக நிறுவனமொன்றில் முகாமையாளராக கடமையாற்றும் இவர் ஊடகத்துறையுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்.

அரசியல்வாதிகள், கல்வியாளர்கள், வர்த்தகர்கள் என பலரது தொடர்புகளும் இருப்பதால் அறிவாலயப் பணிகளை தொடர்வது இவரால் சாத்தியமானது.

**செந்தாளன் பாரிஸ்**

மட்டக்களப்பு பண்டாரியாவெளியை பிறப்பிடமாகக் கொண்ட நல்லரத்தினம் விபுலானந்தா வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்லூரி, மொடொன் கல்வி நிலையம் ஆகியவற்றின் இயக்குனர், காப்புறுதி கூட்டுஸ்தாபன வெளிக்கள உத்தியோகத்தர், பத்திரிகை முகவர் என பல துறைகளில் பணியாற்றியவர்.

இலங்கையில் நிலவிய யுத்த சூழலினால் 2000 ஆம் ஆண்டு பிரான்சு நாட்டுக்கு புலம்பெயர்ந்து வாழ்கிறார்.
பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் அண்மையில் அவரை சந்தித்தவேளை பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அறிவாலயத்தின் பணிகள் குறித்துக் கேட்டதற்கு பதிலளித்த நல்லரத்தினம், "தாயகத்தில் நிகழ்ந்த போரின் கொடுமைகளை நேரில் அனுபவித்திருக்கிறேன். அதன் வலிகள் பாதிப்புகளை கண்டிருக்கிறேன். உடலால், உளத்தால் ஊனமடைந்தவர்களை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வரமுடியாதா? என ஏங்கியிருக்கிறேன், அதிலும் மாணவ சமுதாயம் என்னகுற்றம் செய்தது அவர்களுக்கு என்னால் உதவமுடியாதா? என்ற எண்ணமே அறிவாலயம் ஆரம்பமாக விதை போட்டது” என்றார்.

அறிவாலயம் அறக்கட்டளையின் ஆரம்பம் குறித்து விபரித்த அவர், "எனது தந்தையார் அமரர் அலையப்போடியார் ஞாபகார்த்தமாக மட்டக்களப்பு பண்டாரியாவெளியில் 2010ஆம் ஆண்டு, பங்குனி 01ஆம் நாளில் அறிவாலயம் ஆரம்பிக்கப்பட்டது. நூலகம், மாலை வகுப்புகள், விசேட பயிற்சி வகுப்புகளுடன் அறிவாலயம் செயற்படுகிறது. இதே போன்று சக்தி மகளிர் இல்லம் எனும் பெயரில் 22 பெண் பிள்ளைகளை பராமரிக்கிறோம். போரினால் பெற்றோரை இழந்தவர்கள் மற்றும் ஆதரவு அற்றவர்களுக்கே உதவி வருகிறோம். மட்டுமேற்கு கல்வி



வலயத்தில் வருடந்தோறும் 60 -70 மாணவர்களுக்கு வங்கியில் பண வைப்பு செய்து அவர்கள் கல்விக்கு உதவி வருகின்றோம். இதற்கென அறிவாலயம் அறக்கட்டளை பல செயற்பாட்டாளர்களை பணிக்கு அமர்த்தியுள்ளது’ என்றார்.

தனித்து நின்று இப்படியான ஒரு பணியைச் செய்வதில் உள்ள சிரமங்கள்

தொடர்ச்சி பக்கம்..15

# (ஏ)மாற்றம் கண்ட கிழக்கிலங்கைத் தமிழர்கள்

என்னடா இவ்வளவு காலமும் கல்வியில் முன்னேற்றம் வேண்டும் என்று கதறியவன் அரசியலுக்குக் குதித்துவிட்டான் என எண்ணுகின்றீர்களா? இல்லை. எனது கடந்த இரண்டு கட்டுரைகளும் கல்வி சம்மந்தமாக அமையக் காரணம், எம் சமூகம் கல்வியில் மட்டும் தான் பின்தங்கியுள்ளது என்று நான் நினைத்ததால்தான். ஆனால் அது தவறு என்று செருப்பால் அடித்தது போல் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள் எமது தமிழ் அரசியல்வாதிகள். ஆம், எமது சமூகம் கல்வியில் மட்டுமல்ல அரசியலிலும் பின்தங்கியே காணப்படுகின்றது. இக் கட்டுரையை தமிழ் அரசியல்வாதிகள் வாசித்தாலாவது திருந்துவார்கள் என்ற நம்பிக்கையில் எழுதுகிறேன். நல்ல மாட்டுக்கு ஓர் சூடு அல்லவா?

தமிழ் நம் இனம், தமிழன் தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்றவாறெல்லாம் அசரீதியை ஏற்படுத்திக் கொண்டிருந்தவர்களின் முகம் சிறிது சிறிதாக எம் மக்களின் பார்வைக்குப் புலனாகின்றது. இது தேர்தல் காலம் என்பதனாலோ தெரியவில்லை. நான்கைந்து வருடங்களுக்கு முன் எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராளுமன்றம், மாகாண சபைக்கு அனுப்பப்பட்ட அரசியல்வாதிகள் எங்கு சென்றார்கள் என்றே தெரியவில்லை. புலி பதுங்குவது பாய்வதற்குத்தான் என்பதைப் போல பொறுமை காக்கும் அரசியல்வாதிகள் எம் இனத்திற்கு பெருமை சேர்ந்துத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் ஐந்து வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. கேட்டால் அது செய்தோம், இது செய்தோம் என்று அறிக்கை விடுகின்றனர். இந்த நிலைப்பாடு எவ்வாறு இருக்கின்றது தெரியுமா? பிரபல்ய பாடசாலைகள் முந்நூறு மாணவர்களில் இருபத்து நான்கு மாணவர்களை சிறந்த பெறுபேறைப் பெறச்செய்துவிட்டு எங்கள் பாடசாலை தலைசிறந்த பாடசாலை எனத் தம்பட்டம் அடிப்பது போல் உள்ளது. மீதி 276 மாணவர்களின் நிலை என்ன? இவ்வாறானதே எம் அரசியல்வாதிகள் எமக்குப் பெற்றுத் தந்த வெற்றிகள். ஓராயிரம் பிரச்சினைகளில் ஒன்றிரெண்டை தீர்த்து வைத்துவிட்டு அவர்கள் மீது செலுத்தப்படும் குற்றச்சாட்டிலிருந்து தந்திரமாகத் தப்பித்துக்கொள்கின்றனர். இந்த விடயத்தில் மட்டும் அரசியல்வாதிகள் போன்று செயற்படுகின்றனர்.

**'மாற்றத்தை விரும்பும்' மாணவன்**

உதாரணமாக, கல்முனைப் பிரதேச சபைப் பிரச்சினையை எடுத்துக்கொள்வோம். ஓர் நிரந்தரமான தீர்வைப் பெற்றுத்தருவதற்குக் கூட ஆளுமை இல்லாதவனாகத் தானே இருக்கின்றோம். புது துடைப்பம் நன்றாகக் கூட்டும் என்பதைப் போல பிரச்சினை ஆரம்பித்தபோது தமிழருக்கு நிரந்தரத் தீர்வு வேண்டும் என்று ஓசை கொடுத்தனர். பின்னர் அவர்களின் பேச்சையே காணவில்லை. ஓர் விடயத்தில் இறங்கினால் அதில் தீர்வு கண்ட பின்னரே அடுத்த விடயத்திற்குச் செல்ல வேண்டும். ஓர் விடயத்திற்கு ஆசைப்பட்டால் மட்டும் போதாது. அடம் பிடிக்க வேண்டும். நாம் அடம்பிடிப்பதிலிருந்துதான் அதன் மீது நாம் எந்தளவிற்கு ஆசை வைத்திருக்கிறோம் என மற்றவனுக்குத் தெரியவரும். வெற்றியிலக்கை அடையும் வரை முயற்சிக்க வேண்டும். இதுதானே தமிழனின் கோட்பாடு, தமிழ் அரசியல்வாதிகளே. சிலருக்கு, என்னடா இவன் சம்மந்தமில்லாமல் பேசுகிறான் என்று தோன்றும். ஆனால் சம்மந்தனுக்கு மட்டும்தான் மன்னிக்கவும் சிறிய திருத்தம், சம்மந்தப்பட்டவர்களுக்கு மட்டும் தான் தெரியும் இவற்றின் தேவைப்பாடும், முக்கியத்துவமும். கிண்ணியா பிரச்சினையை கண்ணுக்குத் தெரியாதவர்கள் போல் வேடிக்கை பார்க்கின்றனர் எம் அரசியல் தலைவர்கள்.



நாட்டில் பலராலும் பேசப்பட்டு வந்த சர்ச்சைக்குரிய பிரச்சினை மட்டக்களப்பு கம்பஸ். இதற்கெதிராக குரல் எழுப்பியவர்கள் யாவர்? எவருமே இல்லை. அதையும் மீறி குரல் கொடுப்பவனுக்கு எதிராக நம் தலைவர்கள் குரல் கொடுக்கின்றனர். கேட்டால் எதிர்க் கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்கு மாறியவருக்கு கட்சியில் இடமில்லை. சம்மந்தமே இல்லாத கதை. இந்த ஐந்து வருட காலமும் எதிர்க் கட்சியிலிருந்து நீர் எதைச் செய்தீர்கள்? அவராவது ஆளுங்கட்சியில் தனக்கு வழங்கப்பட்ட உரிமையை, அவருக்குக் காணப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி ஏதோ செய்திருந்தார். இதை நான் கூறினால், அவருக்குச் சார்பாக கதைக்கிறேன் என நினைத்துக் கொள்ளும் ஒரு சில மூடர் கூட்டம். அரசியல்வாதிகளே, நாம் கூட்டமாக உள்ளோம். ஆனால் ஒன்றாக இல்லை. தமிழரின் வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு இல்லாமல் போகப் போகிறது என்று தெரிந்ததும் ஒன்றாக இணைந்த தமிழனைப் போன்று தமிழ் இனத்திற்காக நாம் ஒன்று சேர வேண்டும். நமக்குள் தீயை மூட்டி அந்த வெப்பத்தில் குளிர்காயும் வேற்றினத்தவனை வேரோடு அழிக்க வேண்டும்.

முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி. மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன். முஸ்லீம்களுக்காக முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுத்தான் தமிழன் என்று கொடுத்து கொடுத்து சிவந்து போன கரங்கள் தமிழனின் கரங்கள். இதற்கு மேல் என்ன இருக்கிறது விட்டுக் கொடுப்பதற்கு? எனக்கு ஓர் சந்தேகம்? எதற்காக முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுத்தீர்கள்? இன ஒருமைப்பாடுக்காகவா? இங்கு, ஓர் இனமே ஒருமைப்பாடின்றி பிரிவடைந்து காணப்படுகின்றது. இதற்குள் ஈர் இனங்களுக்கிடையே ஒருமைப்பாடு. இதைக் கேட்கும் போது சிரிப்பாக இல்லையா மக்களே? இந்த ஐந்து வருடத்தில் மட்டக்களப்பில் நடந்தேறிய

தொடர்ச்சி பக்கம்..10

# பலாலியும் பலவித நினைவுகளும்..



1939 --- இரண்டாம் உலகப் போர் தொடங்கி விட்டது. அதனை எதிர்பார்த்து பிரித்தானியா தனது காலனிகளாக உள்ள நாடுகளை பாதுகாக்க அவசரமாக பல நடவடிக்கைகளை எடுத்தது.

ஜப்பானும் அச்சு அணியில் இருந்ததால் அவர்களின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள கொழும்புக்கு வெளியேயும் விமானத் தளங்களை பிரித்தானியா அமைக்க ஆரம்பித்தது.

யாழ்ப்பாணத்தில் பலாலி, மட்டக்களப்பு, திருகோணமலையில் சீனன்குடா ஆகிய இடங்களில் விமான நிலையங்கள் அமைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சியின் கைதடிக்கும் வலிகாமம் கிழக்கின் நீர்வேலிக்கும் இடையே உள்ள தரவையில் விமான நிலையமொன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு வெள்ளைக்கார அதிகாரி தலைமையில் 50 காப்பிலிகள் (நீக்ரோக்கள்) உள்ள அணி வேலையைத் தொடங்கியது.

விமானம் இறங்கக் கூடிய வகையில் நிலம்

**வேதநாயகம் தபேந்திரன்**

கற்கள் கொண்டு செப்பனிடப்பட்டது.

விமான ஓடுபாதை அமைக்கப்பட்டது. அது விமான நிலையமென்று ஜப்பானிய விமானங்களுக்குத் தெரியாதிருப்பதற்காக வடலி தாண்டி வளரும் பருவத்து பனை மரங்கள் பிடுங்கி எடுக்கப்பட்டு விமான ஓடுபாதையின் கரைகளில் நடப்பட்டன.

பெரிய பனைகளாயின் அரைப் பனை நிலத்தினுள் தாழ்ந்து போகக் கூடியதாக நடப்பட்டது.

கைதடியிலுள்ள இளைஞர்கள் விமான ஓடுபாதை அமைக்கும் பணியை விடுப்புப் பார்க்கச் செல்லும் போது வீட்டிலிருந்து முட்டைகளை எடுத்துக் கொண்டு சென்றார்கள்.

அவற்றை நீக்ரோக்களுக்குக் கொடுக்க அவர்கள் நாலைந்து றாத்தல் பாணைக் கொடுத்தார்கள்.

அந்தப் பாண்களை தரவை நிலத்தில் வைத்து அதன் மேல் இருந்து விளையாடி விட்டு வந்தார்கள். பாண் சாப்பிடுவதற்குரிய ஒரு உணவு எனத் தெரியாத காலம்.

பிரித்தானியர்கள் விமான நிலையத்தை அமைத்த பின்னர் பேரிரைச்சலுடன் விமானங்கள் வந்து போகத் தொடங்கின.

ஆடு, மாடு, கோழி எனக் கால்நடைகள் யாவும் பயந்தோடின.

ஜப்பானிய விமானங்கள் வந்து குண்டு போடுமோவெனப் பயந்தார்கள்.

ஏனெனில் திருகோணமலைச் சீனன்குடா விமான நிலையத்திற்கு அண்மையில் இருந்த எரிபொருள் தாங்கிகள் மீது ஜப்பானிய விமானங்கள் குண்டுபோட்டு அவை பெருநெருப்பாகப் பற்றியெரிந்த செய்தி இங்கும் வந்தது.
இதனால் கைதடி, நீர்வேலி ஊர்களில் பிரசித்தமான ஊர்களில் மக்கள் ஒன்று கூடி ஒரே நாளில் பெரும் அபிசேகங்கள் செய்தார்கள். பொங்கல் பொங்கினார்கள்.

அதன் பலனோ என்னவோ பெருமழை வந்தது. பிரித்தானியர் அமைத்த விமான நிலையம் வெள்ளக் காடாகியது. விமானங்கள் சேற்றில் புதைந்தன.

அதனால் வெள்ளைக்காரர்கள் நீக்ரோக்களைக் கொண்டு வெள்ளம் வடிய வெள்ள வாய்க்கால்களை வெட்டினார்கள்.

அந்த இடம் பொருத்தமில்லையெனக் கடற்கரையை அண்டிய மேட்டுக்காணியை தேடினார்கள்.

வலிகாமம் வடக்கின் பலாலி தெரிவாகியது. பலாலி என்ற சொல்லுக்கு தமிழில் கருத்து தெரியவில்லை.

பலாலியில் இரண்டாம் உலகப்போர் தேவையை முன்னிட்டு விமான நிலையம்

தொடர்ச்சி பக்கம்..15

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:

" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## பாடசாலைகளுக்கு அண்மையில் வீட்டுத்திட்டம் : பாடசாலைக்கு நன்மையே!

**படுவான் பாலகன்**



'மேட்டிலையும், மலையிலையும், குடிசையிலையும் இருந்த மக்களை ஒன்றாக இணைத்து கல்வீட்டில் குடியேற்றி இருக்கா மிக்க சந்தோசம்' என்கிறார் சாமித்தம்பி.

அண்மையில் நாற்பதுவட்டை, விடுதிக்கல் கிராமங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் அமைச்சர் சஜித் பிரமதாசவினால் திறந்து வைக்கப்பட்டன. தாந்தாமலையில் முருகன் ஆலயம் அமைந்துள்ளமையினால் முருகப்பெருமானின் பெயரை தாங்கியதாக 25வீடுகளுடன் குமரன்குடியிருப்பு என்ற பெயரில் ஒரு மாதிரி கிராமும், விடுதிக்கல் கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காளி கோயிலை நினைவுபடுத்தும் வகையில் 26வீடுகளை கொண்டதாக காளிகாபுரம் என்ற பெயரில் ஒரு மாதிரி கிராமமும் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.



உண்மையில் இவ்வீட்டுத்திட்டம் அமையப்பெற்றமை இங்குள்ள மக்களுக்கு வரப்பிரசாதம்தான் இதனை யாரும் மறுத்துவிட முடியாது. இதற்காக உழைத்து நின்ற, குறிப்பாக வீட்டுத்திட்டத்தினை அமைக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு செயற்பட்ட கிராமமட்ட உத்தியோகத்தர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை அனைவரையும் பாராட்ட வேண்டும். அவர்களை வாழ்த்தவும் வேண்டும். என்பது சாமித்தம்பியுடன் பேசிக்கொண்டிருந்த விகஸ்டியின் கருத்தாகும். அதிகாரிகள் வீட்டுத்திட்டத்தினை அமைப்பதில் ஆர்வம் காட்டாதிருந்தாலும், வீட்டுத்திட்ட வேலைகள் விரைவாக நிறைவேறுவதும் கஸ்டம்தான்.

இரு மாதிரி கிராம வீட்டுத்திட்டங்களினால் மக்கள் அடைந்துள்ள பயனையும் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. விடுதிக்கல், நாற்பதுவட்டை ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் ஓரிடத்தில் கூட்டாக வாழ்ந்தமை மிகக்குறைவு, ஆங்காங்கு அமைந்துள்ள மேட்டுநிலங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். இதனால் இம்மக்களுக்கான பாதுகாப்பென்பது கேள்விக்குறியான காலச்சூழலில், ஒரே இடத்தில் 25வீடுகள் அமைக்கப்பட்டமை என்பது ஆங்காங்கு சிதறி, குடிசைகளில் வாழ்ந்த மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்திருக்கின்றது.


பாடசாலைக்கும் அப்போது வீடுகள் அமைந்துள்ள இடத்திற்குமான தூரம் 2கிலோ மீற்றர் அல்லது அதற்கும்மேல் என்பதினால் கடந்த காலங்களில் மாணவர்களின் பாடசாலைக்கான வரவிலும், நேரத்திற்கு சமுமளித்தலிலும் சிக்கல்கள் நிலவியிருந்தன. ஆனால் இப்போது அமைக்கப்பட்டுள்ள இரு வீட்டுத்திட்டங்களும் பாடசாலைக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ளமை இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. பாதுகாப்பற்றிருந்த பாடசாலைகள் பாதுகாப்பினை பெறும் நிலையினை அடைந்திருக்கின்றன. அண்மையில் மக்கள் அமைந்துள்ளமையினால் எந்நேரமும் மக்களின் நேரடிக்கண்காணிப்பு பாடசாலை மீது ஏற்படும். பாடசாலைக்கும் சமுகத்திற்குமான தொடர்பு நெருங்கியதாகவிருப்பதற்கும், மாணவர்களின் வரவு வீதம் அதிகரிப்பதற்குமான நிலையினை அடைந்துள்ளதெனலாம். ஒரு கிராமத்தின் இரு கண்களாக இரு ஆலயங்கள் பார்க்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று இறை ஆலயம் மற்றையது வித்தியாலயம் இவை இரண்டிற்கும் அண்மையில் மாதிரிகிராமம் அமைந்துள்ளமை இக்கிராமத்தினை எழுச்சி கிராமமாக மாற்றுவதற்கான அடித்தளமே என்கிறார் சாமித்தம்பி.

இப்பகுதியில் உள்ள மக்கள் குடிநீரினைப் பெறுவதில் நாள்தோறும் இன்னல்களை எதிர்நோக்கியே பெறுவதுண்டு. இவற்றினை குறைக்கும் வகையில் இம்மாதிரி வீட்டுத்திட்டத்தில் உள்ளவர்களுக்கு குடிநீரினை வழங்கும் பொருட்டு கிணறொன்று அமைக்கப்பட்டு நாளொன்றிற்கு 5000லீற்றர் நீரினை இங்குள்ள 25வீடுகளுக்கும் வழங்கும் வகையில் வீட்டுத்திட்டத்தினை அமைத்துள்ளமை சிறப்பானது. இப்பகுதிகளில் யானைகளின் தொந்தரவும் அதிகமே. ஆனாலும் ஒருமித்த சூழலில் எல்லோரும் வாழ்கின்ற போது யானைகளை துரத்துவது, அவற்றின் தாக்குதல்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கும் ஓரிடத்தில் வாழல் பயன்கொடுத்துள்ளது.



மின்சார இணைப்பு வசதிக்கான செலவினை வீட்டு உரிமையாளர்கள் வழங்கினாலும், அனைவருக்கும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடக்கூடியதே. இதனோடு காணிகளும் வழங்கப்பட்டுள்ளமை இன்னமும் இம்மக்களுக்கு நன்மையே. வீடு அமைப்போமா? என்ற எண்ணத்தில் வாழ்ந்தவர்கள் கூட இவ்வீட்டுத்திட்டம் கிடைத்தமையினால் அளவற்ற மகிழ்ச்சி கொண்டிருக்கின்றனர். இருந்தபோதிலும் இன்னும் சிறிய சிறிய அபிவிருத்தி வேலைகளையும் இத்திட்டத்தில் செய்ய வேண்டியும் உள்ளது. குறிப்பாக விடுதிக்கல் வீட்டுத்திட்டப் பகுதியில் மணலினாலேயே வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வீதிகள் கிறவல் வீதிகளாக மாற்றப்பட வேண்டும். வீதி மின்விளக்குகளும் அமைக்கப்பட வேண்டும் என்பதும் இங்குள்ள மக்களின் குறைகளாக தெரிவதாக சாமித்தம்பி சுட்டிக்காட்டுவதுடன், திறப்பு விழாவின் போது விடுதிக்கல் கிராம வீடுகள் விழாக்கோலம் பூண்டிருந்தமையுடன், இத்திட்டப்பகுதியில் மூலிகைத்தோட்டம் அமைக்கப்பட்டுள்ளமையும் சிறப்புக்குரியதே. எனக்கூறியவனாக சாமித்தம்பியும், விகஸ்டியும் இவ்விடம் விட்டு சென்றனர்.

## கும்பாபிஷேகம்








மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பௌத்த விகாரை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீ கண் திருஷ்டி கணபதி ஆலயத்தின் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் நிகழ்வு வியாழனன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## நன்றி நவில்கின்றோம்.



**திருமதி ரஜனி தேவி ஜோர்ஜ் சந்திரசேகரன்**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காம் அன்புத் தெய்வத்தின் துயரச் செய்தியறிந்து ஓடோடி வந்து நேரிலும் தொலைபேசிகள் வாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்ததோடு, எமது ஆறாத்துயரில் பங்கு கொண்டு பல்வேறு வகையிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் புரிந்து ஆறுதல் அளித்த அனைவருக்கும்.

மலர்வளையங்கள், பதாதைகள், பிரசுரங்கள் வைத்து அஞ்சலித்த அமைப்புக்கள், நிறுவனங்கள் உட்பட அனைவருக்கும்,உணவுகளைப் பரிமாறி எமது சோகங்களுடன் பங்கெடுத்த உறவுகளுக்கும், எட்டாம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட நண்பர்களுக்கும் உறவுகளுக்கும், எங்கள் துயரை தங்கள் துயராய் எண்ணி பங்கெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் மனம் நெகிழ்ந்த நன்றிகள் பல.

குடும்பத்தினர்,
தாமரைக்கேணி.
மட்டக்களப்பு

0777116928

# இஸ்லாமிய வாழ்வின் அழகைக் கெடுத்துவிட்ட வஹாபிஸம்



ஒரு மஞ்சள் சோற்றுத் தட்டின் புகைப்படத்தை முகநூலில் பார்த்த கணமே மனம் சடுதியாக காலத்தின் தடங்களில் உருண்டோடி பள்ளிகளில் கந்தூரி ஓதி தரும் நார்சாவை நினைவுபடுத்துகிறது. அதன் வாசனை மூக்குத் துவாரங்கள் வழியாக உடலின் நாடி நரம்புங்கள் எங்கும் பரவி நிரம்புகிறது.

வீட்டில் என்னதான் குடம் குடமாக நெய் சேர்த்துத் தாழித்து மஞ்சள் சோறு ஆக்கினாலும் அந்த நார்சா சோற்றின் சுவையும் மணமும் என்றைக்கும் ஈடானதில்லை.

காகிதச் சுருள்களிலும் வாழை இலை, தென்னோலைக் கிடுகுகளிலும் தரும் அந்தச் சோறு தரும் சுவையும் மணமும் அன்பும் குதூகலமும் நிரம்பிய அலாதியான அனுபவங்களை எல்லாம் வஹாபிசம் நம் குழந்தைகளுக்கு இல்லாமலே செய்துவிட்டது. பள்ளிகளிலும் வீடுகளிலும் பண்பாட்டு ரீதியாக ஓதப்பட்டுவந்த மௌலீதுகளை மௌட்டீகம் என்று பரப்புரை செய்து ஓரளவு வெற்றியும் கண்டுவிட்டுள்ளது வஹாபியிஸம்.

வடைப் பருப்பு, ஏலம், கருவா, பிளம்ஸ், வெங்காயம், பச்சை மிளகாய் அனைத்தையும் நெய்யில் தாழித்து தேங்காய்ப்பால் கலந்த நீரில் அரிசியை அவிய விட்டுப் பதமாக இறக்கும் அந்த மஞ்சள் நிற நாரிசா சோற்றின் சுவைக்கு ஈடான சோறு எங்கேயும் உண்டதாக நினைவில்லை. அது வெறும் சோறு மட்டுமேயில்லை. அந்த ஒவ்வொரு பருக்கைச் சோற்றிலும் ஒரு குதூகல உணர்வு அப்பியிருக்கும்.

முஸ்லிம் ஊர்களில் மௌலீது ஓதப்படும் காலங்களில் ஊதுபத்திகளின் வாசனைகளால் தெருக்கள் சந்திகள்கூட கமகமக்கும். ஊரே கோலாகலமாகிவிடும்.

மாஜிதாவின் தலையாட்டி பொம்மை கதையில் இப்படியொரு பகுதி வரும்.

"பெரியபள்ளிவாசலில் புஹாரி ஓதும் மாதத்தில் முழு ஊருமே கொண்டாட்ட வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கும். நிலவின் வெளிச்சத்தில் நேத்திக்கடனை நிறைவேற்ற சாரை சாரையாக பெண்களும் ஆண்களும் பள்ளிவாசலை நோக்கி விரைவார்கள். நல்ல சுகதேகியான கொழுத்த கிடா ஆடு ஒன்றை வாங்கி எடுத்துக்கொண்டு, நேர்த்தி கடனை நிறைவேற்ற பள்ளிவாசலுக்கு செல்லும் பொழுது எங்களது முழுக்குடும்பமும் ஒன்று சேர்ந்து செல்வோம். ஆட்டின் கழுத்தில் தொங்கும் கயிற்றை கலந்தர் காக்கா பிடித்துக்கொண்டு முன்னால் நடப்பார். குண்டு மணிகள் வெடித்துச் சிதறும் சத்தங்களைப்போன்று பெண்களின் சிரிப்பொலியுடன் பள்ளிவாசலை நோக்கிப் புறப்படுவோம். குழந்தைகளான நாங்கள் பள்ளிவாசலில் தரப்போகின்ற நாரிசாவைப் பற்றிய நினைவுகளை அலைய விட்டவாறே வீதி நெடுகிலும் கதைத்தபடி செல்வோம். பள்ளிவாசல் முற்றத்தில் இருக்கும் வாகை மரத்தில் ஆட்டின் கயிற்றை பிடித்து கலந்தர் காக்கா கட்டிவைப்பார். உள்ளேயிருந்து வந்த சாஹுல் மோதினார் ஆட்டினை பார்த்து விட்டு எல்லாம் சரியாத்தான் இருக்கு கலந்தர் உள்ள வந்து நாரிசாவ வாங்கிட்டுப் போங்க என்று கூறுவார். நாரிஸா பொட்டலத்துடன் வீடு திரும்புகையில் "வஹாபிசம் பாரம்பரிய இஸ்லாத்தின் அழகையும், எளிமையையும் கொண்டாட்டங்களையும்இல்லாமல் செய்துவிட்டது. பெண்களைப் பள்ளிகளை விட்டுத் தூரமாக்கியது. முன்பெல்லாம் நேர்ச்சைகளை நிறைவேற்றுவதற்காக, மரணித்தோர் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் கபூர்களைத் தரிசிப்பதற்காகவெல்லாம் பெண்கள் செல்வது வழக்கம். கபூர்களைத் தரிசிப்பது தடுக்கப்பட்டது, இணைவைப்பது என்ற எச்சரிக்கைகளைக் கூறித் தடுத்தது வஹாபியிஸம். கபூர்களுக்குத் தரிசிப்போரைக் கபூர் வணங்கிகள்



என்று வஹாபிகள் விமர்சிக்கின்றனர். அது இறைவனுக்கு இணையாகச் செய்யப்படும் ஒரு செயற்பாடு என்றும் அது தடுக்கப்பட்டது என்றும் வாதிடுகின்றனர். இப்படித்தான் மௌலீது ஓதுவதும் பித்அத் என்கிறார்கள். இவற்றில் ஈடுபடுவதெல்லாம் முஷ்ரீக்குகளின் மூடத்தனங்கள் என்கிறார்கள். இந்தப் பண்பாடுகள் எப்படி, ஏன் இஸ்லாமிய மக்களின் வாழ்வுக்குள் வந்தன, இவற்றில் இருக்கத்தக்க குறைபாடுகள் என்ன, அவற்றை எப்படிச் சரி செய்து கொண்டு நினைவு கூரல்களையும் பரிமாற்றங்களையும் கொண்டாட்டங்களையும் செய்யலாம் என்று மக்களை அறிவுறுத்தவில்லை வஹாபிஸம். இவை அத்தனையும் செய்யத்தகாதவை, நரகிற்கு வழிகாட்டுபவை என்ற முத்திரைகளை ஓங்கி அடித்து அப்படியே அறைந்து சாத்தவே முயற்சிக்கிறார்கள்.

வஹாபியிஸத்தின் கலாசாரங்களான வெறுப்பு, வன்முறை, முகமூடி இவற்றை அறிமுகப்படுத்தி இவைதான் சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் பாதைகள் என்று காண்பித்து, மரபு இஸ்லாத்தின் அத்தனை இயல்புகளையும் புதைத்து விட்ட இந்த வஹாபிகள் சூபியிஸத்தின் அத்தனை தத்துவங்களையும் நிராகரித்து இஸ்லாமிய வாழ்வின் அழகை ஒன்றுமேயில்லாது செய்துவருகிறார்கள். முஸ்லிம் ஊர்களில் பொழுது விடிந்தால் இசைக்கும் இஸ்லாமியக் கீதங்கள் இப்போது அருகிவிட்டன. ஊதுபத்தி, சாம்பிராணி வாசனைகள் குறைந்துவிட்டன. இயந்திரத்தனமான மனித வாழ்வுக்கு ஏற்றவிதமான பண்பாடுகள் மட்டுமே இப்போது புழக்கத்தில் உள்ளன. மக்கள் கல்பிலிருந்து (மனத்திலிருந்து) பேசிய காலமொன்றிருந்தது. கொடுப்பதும் பெறுவதும் கொண்டாட்டமாகவிருந்தது. சோறும், ரொட்டியும் சொல்லொண்ணாத குதூகலத்தை அள்ளித் தந்துகொண்டிருந்த அந்தக் காலத்தைப் பற்றி எங்கள் பிள்ளைகளுக்கு எதுவும் தெரியவில்லை. அவர்களுக்கு சாம்பிராணி, ஊதுபத்தி வாசனைகளின் ஆதூரங்களை உணரக்கூட முடியவில்லை. இதமான வாசனையும், இசையும், கொடுப்பதும் பெறுவதும் ஆன்மீக வாழ்விலிருந்து பிரித்தெடுக்கமுடியாதவை என்பதை எதிர்கால சமுதாயம் உய்த்துணர ஒரு வாசல்கூட இல்லை.

**ஸர்மிளா ஸெய்யித்**

இஸ்லாமிய மாதங்களில் ஒன்றான ஷஃபான் மாதத்தின் பதினைந்தாம் (பராஅத்) நாளில் நோன்பிருந்து, அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் ரொட்டிகளைப் பகிர்ந்து அளிக்கும் "பராஅத் ரொட்டி" வழக்கம் கூட இப்போது இல்லாது போய்விட்டது. பராஅத் நோன்பிருப்பது இப்போதும் உள்ளது. ஆனால் ரொட்டி தடை செய்யப்பட்டுவிட்டது. அதாவது இஸ்லாமிய வாழ்வு நெறியை முழுமையும் மத அனுட்டானங்கள் என்பதாக இறுக்கமாக்கி அதனையொட்டியிருந்த கொண்டாட்டங்களை சிதைத்ததைத்தான் வஹாபியிஸம் நிலைநாட்டியிருக்கிறது.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் ஒவ்வொன்றும் எந்த இறுக்கமுமில்லாது அன்றாட வாழ்வோடு கலந்திருந்த காலம் இப்போது இல்லை. எந்தக் கடமையாயினும் குதூகலத்தோடும் கொண்டாட்டத்தோடும் அனுபவித்துப் பழகியிருந்த முன்னோர்களின் எமது பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் அழித்துவிட்டுச் சதாவும் அச்சமும் பீதியுமாக சுவர்க்கத்துச் சென்றுவிடக் காத்திருக்கிறோம்.



# விளையாட்டு

## அதிக விக்கட்டுக்களை கைப்பற்றி சாதனை படைத்தார் மலிங்க



இலங்கை அணியின் நட்சத்திர வேகப்பந்துவீச்சாளரான லசித் மலிங்க சர்வதேச இருபதுக்கு20 போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றிய பந்துவீச்சாளராக புதிய சாதனை படைத்துள்ளார்.

இலங்கை- நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற முதலாவது இருபதுக்கு 20 போட்டியில் கொலின் டி கிராண்ட்ஹோமின் விக்கெட்டினை கைப்பற்றியதன் மூலமே லசித் மலிங்க இச் சாதணையை நிலைநாட்டினார்.

மொத்தமாக 99 சர்வதேச விக்கட்டுக்களை கைப்பற்றியுள்ள லசித் மலிங்க பாகிஸ்தான் அணியின் சஹீட் அப்ரிடியின் 98 விக்கட்டுக்கள் என்ற சாதணையையே முறியடித்தார்.

**யாசீர் அரபாத்**

## Hero T10 Blast தொடரின் சம்பியனானது அல்-அக்ஸா அணி



ஓட்டமாவடி ஹீரோ லயன்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் இரண்டாவது பருவகாலத்திற்காக நடாத்தப்பட்ட பத்து ஓவர்களைக் கொண்ட கடின பந்து கிரிக்கட் சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று வாழைச்சேனை அல்-அக்ஸா அணி சம்பியன் பட்டத்தை தனதாக்கியது.

முன்னதாக கல்குடா பிரதேசத்திலுள்ள 24 அணிகளை உள்ளடக்கியதாக இடம்பெற்ற இத் தொடரின் இறுதிப் போட்டிக்கு அல்-அக்ஸா மற்றும் றோயல் அணிகள் தெரிவாகியிருந்தன.
அதற்கமைவாக இறுதிப் போட்டியானது கடந்த 30/08/2019 அன்று வெள்ளிக்கிழமை ஓட்டமாவடி அமீர் அலி மைதாணத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அல்-அக்ஸா அணி முதலில் துடுப்பெடுத்தாடி 10 ஓவர்கள் முடிவில் 6 விக்கட்டுக்களை இழந்து 103 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் பாசில் 24 பந்துகளுக்கு 47 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றோயல் அணியினர் 10 ஓவர்கள் முடிவில் 4 விக்கட்டுக்களை இழந்து 91 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். இதனடிப்படையில் அல்-அக்ஸா அணியினர் 12 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தினை சுவீகரித்தனர். போட்டியின் ஆட்ட நாயகனாக அல்-அக்ஸா அணியின் பாசில் தெரிவானதோடு தொடரின் சிறப்பாட்டக்காரராக றோயல் அணியின் ஹாபிஸ் தெரிவானார்.

சம்பியன் அணிக்கு 20000/- பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் இரண்டாமிடம் பெற்ற அணிக்கு 10000/- பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. இறுதிப் போட்டி நிகழ்வுக்கு அதிதிகளாக விவசாய நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் அமீர் அலி மற்றும் கோறளைப் பற்று மேற்கு பிரதேச சபை தவசாளர் IT. அஸ்மி அவர்களும் கலந்துகொண்டனர்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## சுமித் நாகல்: ரோஜர் பெடரருக்கு அதிர்ச்சியளித்த இளம் இந்திய வீரர்

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் யுஎஸ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டி தொடரின், முதல் சுற்று போட்டியில் முன்னணி வீரரான ரோஜர் பெடரரை முதல் செட்டில் தோற்கடித்து, அதிர்ச்சியை உண்டாக்கினார் இளம் இந்திய வீரர் சுமித் நாகல்.

முதல் சுற்றை 6-4 என சுமித் வெல்ல, ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது, தனது சிறப்பான சர்வீஸ் மற்றும் ரிடன்களால் நாகல் முதல் செட்டை வென்றார்.

இறுதியில் தனது அனுபவத்தால் அடுத்த 3 செட்களையும் வென்று போட்டியை வென்றார் ரோஜர் பெடரர்.

22 வயதான சுமித் நாகல் டென்னிஸ் தரவரிசைப்பட்டியலில் 190-வது இடத்தில் உள்ளார். இவர் டெல்லி என்சிஆர் பகுதியில் பிறந்து வளர்ந்தவர் ஆவார்.

நாகல் இதற்கு முன்பு 2015-இல் விம்பிள்டன் இளையோர் பட்டத்தை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுவரை 20 கிராண்ட்ஸ்லாம்கள் வென்றுள்ள பெடரர், 2003-ஆம் ஆண்டு முதல் எந்த கிராண்ட்ஸ்லாம் தொடரிலும் முதல் சுற்றில் தோல்வியடைந்ததில்லை.

நாகலின் ஆட்டத்திறனை முதலில் அடையாளம் கண்ட டென்னிஸ் வீரர் மகேஷ் பூபதி, தனது டென்னிஸ் அகாடமியில் இவருக்கு பயிற்சி அளித்தார்.

இந்த பயிற்சிக்கு பிறகு ஜெர்மனியில் சில நாட்கள் நாகல் சிறப்பு பயிற்சி மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இருபதுக்கு 20 தொடரை கைப்பற்றியது நியூசிலாந்து அணி



இலங்கை அணிக்கெதிரான மூன்று போட்டிகளை கொண்ட இருபதுக்கு 20 தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று நியூசிலாந்து அணி தொடரை கைப்பற்றியுள்ளது.

நியூசிலாந்து அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. முதலில் நடந்த டெஸ்ட் தொடரில் 1-1 என சமனிலையில் முடிவுறறது.

இந் நிலையில்
இரண்டு அணிகளுக்குமிடையிலான இருபதுக்கு 20 தொடரின் கடந்த முதலாம் திகதி கண்டி பல்லேகலேயில் நடைபெற்ற முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணிவெற்றி பெற்றிருந்த நிலையில் இரண்டாவது போட்டியும் கடந்த செவ்வாய்க்கிழமை கண்டி பல்லேகல மைதாணத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் நிரோஷன் டிக்வெல்ல 39 அவிஷ்க பெர்னாண்டோ 37 ஓட்டங்களை பெற்றனர்.

நியூசிலாந்து அணி சார்பில் சேத் ரான்ஸ் 3 விக்கெட்டும், டிம் சௌத்தி, குஜ்ஜலிஜின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 162 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி கிராண்ட்ஹோம், டொம் புரூஸ் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 19.4 பந்துகளில் 6 விக்கெட்டுக்களை இழந்து165 பெற்று 4 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் தொடரையும் கைப்பற்றியது.

## மேற்கிந்திய தீவுகள் அணியில் அதிக பருமனுடைய வீரர்.



இந்திய அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் போட்டி தொடருக்கான மேற்கிந்திய தீவுகள் அணியில் புதிதாக அதிக எடை கொண்ட வீரர் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார். ரஹீம் கார்ன்வால் என்ற அவ்வீரரின் உயரம் 6.6 அடி மற்றும் இவரது எடை 140 கிலோ ஆகும். கார்ன்வால் மேற்கிந்திய தீவுகள் அணிக்காக விளையாடும் பட்சத்தில் கிரிக்கெட் வரலாற்றில் அதிக எடையுடன் விளையாடிய வீரர் என்ற வினோதமான சாதனையை படைப்பார்.

கார்ன்வால் 55 முதல் தர போட்டிகளில் விளையாடி 2,224 ரன்களும், 260 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.


மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய கிரிக்கெட் அணி 20 ஓவர் தொடரை 3-0 என்ற கணக்கில் முழுமையாக வென்றது. தற்போது ஒருநாள் போட்டி தொடர் நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து இவ்விரு அணிகளுக்கும் இடையேயான டெஸ்ட் போட்டி தொடர் எதிர்வரும் 22-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



# பட்டறிவு

# ராகுல சாங்கிருத்தியாயனை பௌத்த பிக்குவாக ஆக்கிய இலங்கை

**என்.சரவணன்**



ராகுல சாங்கிருத்தியாயனை அறியாத எழுத்தாளர்கள் இருக்க முடியாது. இராகுல்ஜி 1893 ஆம் ஆண்டு கிழக்கு உத்திரப் பிரதேசத்தில் ஆஜம்கட் மாவட்டம், பண்டகா என்ற கிராமத்தில் ஒரு பிராமணக் குடும்பத்தில் முதல் குழந்தையாகப் பிறந்தார். கேதார்நாத் பாண்டே. (09.04.1893 – 14.04.1963) என்கிற இயற்பெயருடன் இவர் தனது பெற்றோர்களை சிறு வயதிலேயே இழந்ததன் பின் தனது பாட்டியால் வளர்க்கப்பட்டார்.

ஆரம்பப் பள்ளிப்படிப்பை மட்டுமே முறையான கல்வியாகக் கற்றாலும் தானே கற்று 30க்கும் மேற்பட்ட மொழிகள் அறிந்த பன்மொழி அறிஞராகவும், பலதுறை வல்லுநராகவும் 70 வயதுவரை வாழ்ந்து, 1963 இல் மறைந்தவர். இவர் 'மகா பண்டிட்' என்கிற பட்டமும் பெற்றவர். தமிழகத்தில் இவர் வாழ்ந்த காலத்தில் தமிழையும் அறிந்து கொண்டார்.

அவர் காசியில் சமஸ்கிருதம், அரபு, பர்சிய மொழிகளை மரபு ரீதியாகக் கற்றுக்கொண்டார். ஏனைய 30க்கும் மேற்பட்ட மொழிகளை அவர் சுயமாகவே கற்றுக்கொண்டார். அவர் எழுதியுள்ள நூல்களைப் பட்டியலிட இக்கட்டுரை போதாது. அவர் எழுதிய எண்ணற்ற டயரிக் குறிப்புகள் இன்னமும் வெளியாகவில்லை. தமிழில் இலக்கிய ஆர்வலர்கள் பலர் வாசிக்கத் தவறியிருக்காத நூல் "வால்காவிலிருந்து கங்கை வரை". "ஒவ்வொரு தமிழனும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்" என சி.என். அண்ணாதுரை பரிந்துரைத்த நூல் அது. அது மட்டுமன்றி மேலும் பல முக்கிய நூல்களை நமக்குத் தந்தவர். இந்த நூல் இந்திய, இலங்கை மொழிகளில் மாத்திரமல்ல ரஷ்ய, செக், போலிஷ், சீன மொழி உள்ளிட்ட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல பதிப்புகளைக் கண்ட நூல்.

1920களின் ஆரம்பத்தில் அவர் தீவிர அரசியல் பணிகளில் இணைத்துக்கொண்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு வடிவமான ஒத்துழையாமை இயக்கத்திற்காக பிரச்சாரங்களில் ஈடுபட்டு 31.01.1922 அன்று அவரை பிரிட்டிஷார் கைது செய்து சிறையில் அடைத்தனர். சிறையில் இருந்தும் கைதிகளை விழிப்புணர்வூட்டுவதற்காக பாடல்கள், கவிதைகள், நாடகங்களை எழுதினார். அவரின் எழுத்துக்கள் சிறைக்கு வெளியில் இரகசியமாக அனுப்பப்பட்டது பிரசுரமும் செய்யப்பட்டன. அடிக்கடி கைதாகி சிறையில் இருந்தார். காங்கிரஸ் கட்சியில் ஜில்லா செயலாளராகவும் இருந்திருக்கிறார். இந்தக் காலப்பகுதியில் தான் புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரம் இருக்கின்ற "புத்தகயா" ஆலயத்தை இந்துக்களிடம் இருந்து மீட்டு பௌத்தர்களுக்கு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். முஸ்லிம்களின் படையெடுப்பைத் தொடர்ந்து முன்னர் இருந்த பௌத்த ஆலயம் சின்னாபின்னமாக்கப்பட்டு பிற காலத்தில் அங்கே இருந்த புத்தரை சிவனென்று வழிபட்டு வந்தனர்.

இன்று பௌத்த மறுமலர்ச்சியின் தந்தையாக கொண்டாடப்படும் அநகாரிக்க தர்மபால அப்போது இலங்கையில் இருந்து அங்கு சென்றவேளை இதனைக் கண்ணுற்று இந்துக்களிடம் இருந்து அதை மீட்பதற்காக "மகாபோதி சங்கம்" என்கிற இயக்கத்தை ஆரம்பித்து தீவிரமாக இயங்கிவந்தார். (அந்த இயக்கத்தின் அந்த முயற்சி பின்னர் வெற்றிபெற்றது. இந்த மீட்பில் ராகுல்ஜியின் பங்கும் கணிசமானது.)

புத்தகயா அமைந்துள்ளதும் பீகாரில் தான். அங்கே சாப்ரா (Chhapra) என்கிற பிரதேசத்தின் காங்கிரஸ் கொமிட்டியை ராகுல்ஜி கூட்டி அங்கே புத்தகயாவை மீட்பதற்கான தீர்மானங்களை நிறைவேற்றினார். இந்த பரிந்துரைகளை காங்கிரசின் வருடாந்த தேசிய மாநாட்டில் ஒரு தலைப்பாக போடப்பட்டது. அங்கே அநகாரிக்க தர்மபாலாவும் தனது சார்பில் பிக்குமார்களை அனுப்பிவைத்தார். அங்கு நிகழ்ந்த பல தரப்பட்ட மொழியிலான விவாதங்களை ராகுல் மொழிபெயர்த்தார். இந்த முயற்சி வெற்றியளிக்காத நிலையில் இலங்கைக்கு புறப்பட்டார். வித்தியாலங்கார பிரிவெனாவைச் சேர்ந்த நாராவில் தர்மரத்ன தேரர் ஒரு தந்தியின் மூலம் அவருக்கு அழைப்பையும் வழிச்செலவுக்கான பணத்தையும் அனுப்பி வைத்தார். 16.05.1927 அன்று அவர் இலங்கை வந்தடைந்தார்.

இலங்கைக்கு வந்த அவர் தேரவாத பௌத்தத்தால் மேலும் ஈர்க்கப்பட்டு பௌத்த தீட்சை பெற்று காவியுடை அணிந்து பௌத்த பிக்குவாக ஆனார். பின்னர் தனது "ராம் உதார் தாஸ்" என்கிற ராகுல சாங்கிருத்தியாயன் என மாற்றிக்கொண்டார். அவரின் எஞ்சிய காலம் முழுவதும் இந்தப் பெயரிலேயே அவர் இயங்கினார். ராகுல என்பது புத்தரின் மகனின் பெயர். இலங்கையில் பல பிக்குமார்கள் தமக்குச் சூட்டிக்கொண்ட பிரபலமான பெயர்.

இலங்கையில் ராகுலுக்கு தேவைப்பட்ட நூல்களை வாங்கிக் கொடுத்து உதவியர் இலங்கை தேசிய காங்கிரசின் தலைவராக, அரசபை உறுப்பினராக, அமைச்சராக எல்லாம் இருந்த சேர் டி.பி.ஜெயதிலக்க.

அமெரிக்காவைச் சேர்ந்த கேணல் ஒல்கொட், ரஷ்யாவைச் சேர்ந்த பிலாவட்ஸ்கி, இந்தியாவைச் சேர்ந்த அயோத்திதாச பண்டிதர் போன்றோர் கூட இதற்கு முன்னர் இலங்கைக்கு வந்து பௌத்த தீட்சை பெற்று பௌத்தர்களாக ஆன நமக்குத் தெரிந்த பிரபலமானவர்கள். இலங்கையில் சிங்களத்தையும், பாளி மொழியையும் பௌத்த இலக்கியங்களைப் பற்றி ஆழமாக கற்றுணர்ந்தார். பௌத்த புனித நூலான "திரிபீடக" (மூன்று பீடங்கள்) எனப்படுகின்ற பௌத்த கிரந்தங்களைக் கற்றுத் தேர்ந்து "திரிபீடகாச்சார்யா" என்கிற பட்டத்தையும் பெற்றார். ஒன்றரை வருடம் கழிந்து 01.12.1928 அன்று அவர் இலங்கையிலிருந்து நேபாளத்துக்கு பயணமானார். ஆனாலும் அவர் அதன் பின்னரும் இலங்கைக்கு அடிக்கடி வந்தார். திபெத்திற்கு இவர் புத்த துறவியாகச் சென்று அங்கிருந்து பல மதிப்புள்ள புத்தகங்களையும் ஓவியங்களையும் இந்தியாவிற்குக் கொணர்ந்தார். இவை முன்னர் இந்தியாவின் நாலந்தா நூலகத்தில் இருந்தவை ஆகும்.

பயணங்கள் தருவது போன்ற அனுபவங்களையும் படிப்பினைகளையும் இலக்கில் வேறெதுவும் தந்துவிடாது என்பது வரலாற்று உண்மை. ராகுல்ஜியும் ஒரு நாடோடியைப் போல ஏராளமான பயணங்களை மேற்கொண்டார். இந்த இடைக்காலப்பகுதியில் அவர் தனது பெயரை ராம் உதார் தாஸ் என்று மாற்றிக்கொண்டிருந்தார். சாதாரண பயணம் அல்ல. தன் வாழ்நாளில் 45 வருட காலத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணத்தில் செலவழித்தவர். அவரின் பயண அனுபவங்களைப் பற்றி அவரே தனியாக எழுதிய "ஊர்சுற்றிப் புராணம்" என்கிற நூல் அனைவரும் வாசித்து இன்புற வேண்டிய நூல். இந்திய பயண இலக்கியத்தின் தந்தை என்று இன்றும் அழைக்கப்படுபவர் ராகுல்ஜி. வர்ணாசிரமதர்ம எதிர்ப்பு, வர்க்க விடுதலை, ஆணாதிக்க எதிர்ப்பு, பிற்காலத்தில் பொதுவுடைமை கொள்கையில் தீவிரம், அம்பேத்காருக்கு ஆதரவு, இட ஒதுக்கீட்டு விடயத்தில் காந்தியின் மீது கடுப்பு, பாகிஸ்தான் பிரிவினை தொடர்பில் "அம்மக்களின் கருத்துக்கே முன்னுரிமை" போன்ற அவரின் அரசியல் நிலைப்பாடுகள் இன்றும் வியக்கவைப்பவை.

இலங்கையில் அவர் பெற்ற அனுபவங்களை விபரித்து "லங்கா" என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதியிருப்பதை அறிய முடிந்தது. இக்கட்டுரைக்காக அந்த நூலை தேடிக்கண்டுபிடிக்க முடிந்தது. 1935 ஆம் ஆண்டு இந்தி மொழியில் 240 பக்கங்களைக் கொண்டதாக இது எழுதப்பட்டது. அனுராதபுரம், பொலன்னறுவை கொழும்பு ஆகிய இடங்களைப் பற்றிய விபரிப்புகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும் பல புகைப்படங்களையும் உள்ளடக்கிய அந்த நூல் இதுவரை தமிழ், சிங்கள அல்லது வேறெந்த மொழியிலும் வெளிவரவில்லை என்பதையும் இந்த இடத்தில் பதிவு செய்ய வேண்டும். 1950 இலிருந்து வெளியான அவரின் "எனது வாழ்க்கைப் பயணம்" என்கிற தலைப்பில் வெளியான 6 தொகுப்புகளில் முதலாவதில் "லங்கா" உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

பிற்காலத்தில் அவர் மாக்ஸிய இலக்கியங்களைக் கற்று ஒரு மாக்சியவாதியாக ஆனார். இந்திய பல்கலைக்கழகங்கள் அவரைக் கண்டுகொள்ளாத காலத்தில் அவரின் புலமையைக் கண்டு லெனின்கிராட் பல்கலைக்கழகம் இரு தடவைகள் அவரை பணியாற்ற அழைத்தது.

அவரின் இறுதிக்காலத்தில் இலங்கையில் வித்தியாலங்கார பல்கலைக்கழகம் (இன்றைய களனி பல்கலைக்கழகம்) அவரை தம்மோடு பணியாற்றும்படி அழைத்தது. அங்கே பேராசிரியராக பணியாற்றினார். இறுதிவரை எந்த இந்தியப் பல்கலைக்கழகமும் உரிய கௌரவித்தை அவருக்கு கொடுக்கவில்லை.

உலகின் பல எழுத்தாளர்கள் தமது இறுதிக்காலத்தில் எதிர்கொண்டிருக்கிற அதே நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய் என்பவற்றால் பாதிக்கப்பட்டதுடன், மிகை உழைப்பு உடலின் ஆரோக்கியத்தையும் வெகுவாக பாதித்து, நினைவாற்றலையும் இழந்து 1963இல் டார்ஜிலிங்கில் இறந்தார்.

உசாத்துணை
Alaka Atreya Chudal – "Rahul Sankrityayan and the Buddhism of Nepal" - European Bulletin of Himalayan Research 46: 62-87 (2015)

பிரபாகர் மாச்வே- இந்திய இலக்கிய சிற்பிகள் ராகுல் சாங்கிருத்யாயன் – ராகுல் சாங்கிருத்தியாயன் – 1986

Rahul Sankrityayan - Lanka - 1935

தொடர்ச்சி...

## (ஏ)மாற்றம் ......

மதிக்கத்தகு மாற்றங்கள் என்ன? கூறுவதற்கு ஒன்றுமில்லை. அப்படியே ஒரு கூட்டம் ஏறாவூர் பக்கமும் மற்றய கூட்டம் காத்தான்குடி பக்கமும் சென்று பாருங்கள். அப்போது தெரியும் நாம் எங்கு நிற்கின்றோம் அவர்கள் எங்கு நிற்கின்றார்கள் என்று.

தமிழ் அரசியல்வாதிகளே, உங்களிடம் ஒன்றை நான் வெளிப்படையாகக் கூற வேண்டும். உங்களின் அரசியலை விட எனக்கு முஸ்லீம் அரசியல்வாதிகளின் அரசியலே மிகவும் பிடிக்கும். அதிலும் ஹக்கீம், ஹிஸ்புல்லா என்றால் சொல்லி வேலையில்லை. அவர்கள் தன் இனத்திற்கு இயன்றவரை இல்லை இல்லை இயன்றளவைத் தாண்டியே செய்திருக்கின்றனர். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுக்கு 5 - 10 வரையான அமைச்சர் பதவிகள், இராஜாங்க அமைச்சர் பதவிகள், பிரதி அமைச்சர் பதவிகள் உண்டு. எம்மால் ஒரு அமைச்சர் பதவியைக் கூட பெற முடியவில்லையே, காரணம் என்ன? பதில் கூறுவீராக...

இவ்வளவு பேசும் நீ ஒரு நாள் அரசியலுக்கு வந்துபார் என்று 'முதல்வன்' பட வில்லன் ரகுவரன் போன்று கூறுவது எனக்குக் கேட்கிறது. எனக்கும் ஆசைதான். எனக்குத்தான் உங்கள் கட்சியில் ஆசனம் தரமாட்டீர்களே. தமிழினத்திற்கு நன்மை செய்ய வேண்டும் என்று சுயேட்சையில் நின்றாலும் வெற்றி கிடைக்காது. அதுவே வீட்டிலே நின்றால் ஓட்டுக்கள் வந்து குவியும். அந்த அளவிற்கு எம்மக்களை மூளைச்சலவை செய்து வைத்திருக்கின்றீர்கள்.

அறிக்கை மட்டும் தெரிவித்து வரும் 'ராஜசிங்கம்' சினம் கொண்டால் என்ன செய்யும் என்று எதிரணியினருக்குக் காட்ட வேண்டும். எம் தமிழின சேனைக்கு உம்மை ராஜாவாக நியமிக்கின்றோம். சேனையை வழிநடத்தி தமிழனுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுங்கள். உமது 'அரிய நேத்திரங்கள்' தமிழனின் குறைகளை மட்டுமே நோக்க வேண்டும். ஆசான்களாக இருந்த நீங்கள் பிரம்பெடுத்து மாணவர்களை திருத்துவது போன்று சாட்டை எடுத்து நாட்டைத் திருத்துங்கள். இனியாவது நாம் ஏற்றம் காணுவோமா? இல்லை, இனிமேலும் ஏமாற்றம் தானா? என்னதான் நீங்கள் 'கப்பல்'இல் வந்து 'வீடு'வீடாய் வாக்கு கேட்டாலும் எம் இனம் 'உதயசூரியன்'ஆய் உருமாறாது நீங்கள் ஒன்றுபடும் வரைக்கும்.

குறிப்பு : தேசம் தேசம் என்று வேசம் போடும் அரசியல்வாதிகளே, இனியாவது மாறிவீடுங்கள். இல்லையென்றால் மாற்றிவிடுவோம் வரும் தேர்தலில்...

# உமா வரதராஜனின் ''மோகத்திரை'' -- சில குறிப்புகள்



'நமது இருண்ட வானத்துக்கு கொஞ்சமேனும் நட்சத்திரங்கள் தேவையல்லவா?

ஒரு நட்சத்திரம் உதிர்ந்து விழும்போது ஏற்படும் துயரத்தை மகாத்மக்கள் அறியமாட்டார்கள்.'

இது இந்தப் புத்தகத்தில் நடிகை ஸ்ரீதேவியின் மறைவை ஒட்டி எழுதிய அஞ்சலி குறிப்பில் இருக்கும் வரிகள்.
தமிழ் சினிமாவை உமாவரதராஜன் எப்படி நேசிக்கிறார், எப்படி தனக்கு இருக்கும் மதீப்பிடுகளுக்கும் உயர்ந்த ரசனைக்கும் இடையில் தமிழ் சினிமாவோடு உறவு கொள்ள முடிகிறது என்பதனை சொல்லும் வரிகள் இவை.

அவர் இந்த சமூகத்தின் காலமாற்றத்தை உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றார். அதற்கு எழுத்து துணை போவதைவிடவும் சினிமா துணை போவதுதான் சாத்தியம். எழுத்து மிகக் குறைவாகவே வெளிவருகின்றது. அப்படி வருகின்ற எழுத்தில் நம்மை அரவணைக்கும் எழுத்து மிகக் குறைவு. சினிமா அப்படியல்ல, எதோ நிர்பந்தத்தை போல அதனை பார்த்து விடுகின்றோம். நாம் காலமாற்றத்தை சினிமாவின் ஊடாகவே உள்வாங்குகின்றோம். உமா வரதராஜன் ஒரு அன்னப்பறவை போல பாலையும் தண்ணீரையும் பிரிக்கும் வேலையை நிரந்தமாராக செய்து கொண்டுதான் இருக்கின்றார். அதற்கு அவருக்கு உலகில் எங்கு எல்லாம் நல்ல திரைப்படங்கள் வருகின்றனவோ அவையெல்லாம் உதவுகின்றன. அதற்கான தடயங்களாகத்தான் இந்த புத்தகத்தில் இருக்கும் அயல் சினிமா எனும் குறைந்த பக்கங்களைக் கொண்ட பகுதி இருக்கின்றது.

அதில் இருக்கும் திரைப்படங்கள் பற்றிய மதிப்பீடுகள் போதும் அவர் இலக்கு எதுவாக இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ள.

உமா வரதராஜன் தமிழ் சினிமாவில் தத்தளிப்பதற்கு கால மற்றத்தை புரிந்து கொள்ள முயல்வதை ஒரு காரணமாக கொள்வதை போல இசையும் ஒரு காரணம். அப்புறம் அதில் பால்யத்தின் சரடு இன்னும் காற்றினிலே ஒரு கீதம் போல வருகின்றது. நாம் தமிழ் திரைப்படங்களைக் கூட பார்க்காமல் இருந்து விடலாம் அல்லது தேர்ந்து ஏதாவது நாட்டுப்படத்தை தேர்ந்தே பார்க்கலாம். ஆனால் தமிழ் சினிமா பாடல்களை கேட்டே ஆகவேண்டும். அது எந்த அவுலியாவுக்கும் நிர்பந்தம். அதனை பற்றி எல்லோருக்கும் அபிப்பிராயம் இருக்கின்றது. பாடத் தெரிந்தவர்கள் அதனை பாடி மயக்குகின்றார்கள். பாட முடியாதவர்கள் அதன் தகவல்களைச் சேகரிக்கின்றார்கள். அந்த ராகங்களை நெஞ்சில் சுமக்குகின்றார்கள். அது தான் மோகத்திரை புத்தகத்தில் தமிழ் சினிமா பாடலுக்கு அவ்வளவு முக்கியத்துவம்.

எம்.எஸ்.வீ. பற்றி பின்னணி இசைக்காக இதில் எழுதப்படவில்லை பாடலுக்காகத்தான் எழுதப்பட்டிருக்கிறார். அவரை சந்திக்க சென்ற அனுபவத்தை அலாதியாக எழுதி இருக்கின்றார். அவ்வளவு சாதித்த மனிதனை சந்தித்த பின் நமக்கு ஏற்படும் மனநிலை மாற்றம் பற்றி சொல்லும் போது ஒரு சிறு பூச்சி போல தன்னை அந்த சந்திப்பு மற்றியதாக பதிவு செய்திருக்கின்றார்.

**ஹஸீன் ஆதம்**

உண்மையில் படைப்பு கனம் தவிர யாரவது அதனை சுமந்து நானே செய்தேன் என்பது வேதனைதான். 'ஒரு சில வருடங்களுக்கு முன்பு பீ.பி.ஸ்ரீநிவாசை தினமும் சந்திக்கும் வாய்ப்பு பெற்றிருந்தேன். உட்லேன்ட்ஸ் ரைவின் ஹோட்டலில் அவர் சட்டைப்பையில் எண்ணற்ற பேனாக்களுடன் தலைப்பாகை போன்ற தொப்பியோடு எதையாவது படித்துக் கொண்டு இருப்பதைத் தினமும் காண்பேன். அப்போது அவரை பார்த்ததும் எழும் கேள்விகள் நம்மை சாமியாரக்க போதுமானவை.' அதனைத்தான் டி.எம். சௌந்தராஜனின் சந்திப்பு பற்றிய பதிவிலும் காண்கிறோம். இவை அந்தப் புத்தகத்தின் மிக அற்புதமான பக்கங்கள். கோலோச்சி வாழ்ந்த ஒரு மனிதனின் வாழ்வின் கடைசி நாட்கள் பற்றிய அற்புதமான தரிசனம். முதுமையின் ஆற்றாமை பற்றிய சிறுகதை. அது நகரத்து மாந்தர்களின் இறுதி நாட்கள் பற்றிய சித்திரம்.

'இயக்குனர் கே. பாலச்சந்தர் அவர்களின் மரண வீட்டிற்கு சென்றிருந்தேன். அது ஒரு பெரிய வசதியான அபார்ட்மென்ட். ஆனாலும் இந்த பிரபலமான மனிதர் இங்குதானா இருந்தார் என்ற மனநிலையை அது உருவாக்கியது. நகரம் அப்படிப்பட்டதுதான். அந்த கட்டுக்கடங்காத கூட்டம் நேற்று வரை அவர் உயிரோடு இருக்கும்போது ஏன் வரவில்லை என்பன போன்ற கேள்விகள் எழுந்து கொண்டே இருந்தன.' இவை எல்லாம் இந்தத் புத்தகத்தை படித்ததும் மேல் எழும்பி என் நினைவை கலங்கடித்தது.
இனி எழுதவில்லை என்றால் எப்போதும் எழுதமாட்டோம் என்று நினைத்து எழுதிய அஞ்சலி கட்டுரைகள் இந்த புத்தகத்தில் அதிகம்.ஆனால், பாலு மகேந்திரா பற்றிய கட்டுரை அப்படியான ஒன்று அல்ல, அது மூன்றாவது மனிதனின் அவர் உயிரோடு இருக்கும் போது வந்ததன் மீளாக்கம். அதனை நான் முதலாவதாகச் சென்னைக்கு செல்லும் போது கொண்டு சென்று இயக்குநர் வேலு பிரபாகரனிடம் கொடுத்தேன். அவர் படித்து விட்டு, 'இந்த பாலு மகேந்திரா பற்றி அந்தாள் சரியா சொல்லிருக்கார்' என்றார். அதன் பிறகான காலங்களில்தான் அங்கு எழுத்தாளர்கள் சினிமா பற்றி பக்கம் பக்கமாய் எழுதும் சூழல் உறுவானது. இப்போது வரைக்கும் பாலு மகேந்திரா பற்றி இப்படியான ஒரு பதிவு வந்ததில்லை. இந்தப் புத்தகம் உமா வரதராஜனுக்கும் தமிழ் சினிமாவிற்கும் இடையிலான உறவை சொல்வது. ஆனால் அவர் அம்மாவுக்கும் தமிழ் சினிமாவிற்கும் உள்ள உறைவை சொல்லும் "காலமும் கோலமும்" கட்டுரை வழியாக தமிழ் சினிமாவின் ஆதி தொட்டு வரலாற்றை தேவையான அளவு பதிவு செய்து வைத்திருக்கிறார்.
அது தமிழ் சினிமாவின் குறுக்கு வெட்டுத்தோற்றம் போல் இருக்கின்றது. உமா வரதராஜன் ஸ்ரீதர் காலத்து இளைஞன். ஆனால் இப்போதைய இளைஞனான நளன் குமாரசாமியின் படங்களையும் பார்க்கின்றார், பகிர்ந்து கொள்கின்றார்.
எல்லாத் தலைமுறைகளையும் இணைக்கும் புள்ளியில் இருக்கின்றார். இளைஞர்களுக்கு வாசிப்பதற்கான அலுபற்ற வரலாற்று நூல் மோகத்திரை.

# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

*அத்தியாயம்-16*

**கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா**



பேச்சுத்துறையில் இராஜதுரை (சென்றஇதழ் தொடர்ச்சி)

சங்கைக்குரிய பிலிப், ஜி.சி.மென்டிஸ், எஸ்.எப்.டி.சில்வா, எஸ்.ஏ.பேக்மன் ஆகியவர்கள் எழுதியுள்ள சரித்திர குடியியல் நூல்களை இலங்கையின் பாடப்புத்தகங்களாக அரசினர் அங்கீகரித்துள்ளனர். திரு. எஸ்.எப்.டி.சில்வா அவர்களினால் எழுதப்பட்டு சிரேஸ்டபாடத் தராதரப் பத்திரப்பரீட்சைக்கு அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள "குடியியல்" நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

"முதன்முதற் குடியேறிய தமிழரின் சந்ததியார் வடமாகாணத்திலும், இலங்கையின் கிழக்குக் கரையோரமாகவும், வசிக்கின்றார்கள். தமிழர் இலங்கையின் குடியேறியது இரு விதங்களினால் என்று கூறலாம். ஒன்று தமிழரசர்களின் படையெடுப்பினால் மற்றது மெல்ல மெல்லவாக வந்து குடியேறியதால்.

இந்நாட்டின் மீது ஏற்பட்ட படையெடுப்புக்களின் பயனாகவும், அந்நியராட்சியின் பயனாகவும், தமிழ் யுத்த வீரர்களும் அவர்களுடைய சுற்றத்தவர்களும் இங்கே வந்து குடியேறி இந்நாட்டை தம் தாயகமாகக் கொண்டனர். இவர்களுடன் தமிழ் வியாபாரிமார்களும் வந்திருக்கலாம். அவர்கள் இவ்வாறு குடியேறியதின் பயனாக பல சிங்கள இடப்பெயர்களுக்குத் தமிழ்மெருகு பூசப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு ஓர் காலத்தில் சிங்கள இராட்சியத்தின் ஒரு பகுதியாக இருந்தது. என்பதற்குச் சந்தேகமேயில்லை. நெடுங்காலத்திற்குப் பின் இலங்கையின் வடபகுதியில் உள்ள இச்சமபூமியைச் சிங்கள மன்னர்களைவிட யாழ்ப்பாண இராட்சியம் என்ற ஒரு இராட்சியம் அங்கே உண்டானது. தென்னிந்தியாவிலிருந்து மக்கள் இங்கே புதிது புதிதாக வந்து குடியேறிச் சனத்தொகையைப் பெருக்கினர்.

தமிழ் மக்கள் இலங்கைக்கு ஓர் புதிய பாதையையும் ஒரு புதிய பண்பாட்டையும் கொண்டுவந்து இந்நாட்டின் அரசியல் பொருளாதார கலைத்துறையில் முக்கியமான பங்கு கொண்டிருக்கிறார்கள்.

திரு.ஜி.சி.மென்டிஸ் எழுதிய அரசினரால் அங்கீகாரம் பெற்று பாடப் புத்தகமாக்கப்பட்டுள்ள நம்முன்னோர் அளித்த அருஞ்செல்வத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது "ஆரியரான சிங்களவர் இலங்கைக்கு வந்த சம்பவம் இலங்கைச் சரித்திரத்தில் மிக முக்கியமானது. அவர்கள் இந்நாட்டில் குடியேறிய பின்னரே இத்தீவின் சரித்திரத்தில் பெரியமாறுதல்கள் உண்டாயின.

இலங்கையிற் கமத்தொழிலை முதன்முதலாகப் புகுத்தியவர் சிங்களவரே. இதனால் நிலைபேறான நாகரீக வாழ்வு இலங்கையில் ஏற்பட்டது. முதல்முதல் அவர்கள் நெல்லைப்பயிரிட்டார்கள். இரும்பின் உபயோகத் தினையும் சிங்களவரே இலங்கைக்கு முதல்முதலாக கொண்டுவந்தனர்."

இத்தகைய சொற்றொடர்களைக் கொண்ட பாடப்புத்தகங்களை பயிலும் இலங்கை மாணவர்களிடம் ஒருவித மனோபாவம் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. அவற்றைப் பயிலும் தமிழ்ப் பேசும் மாணவர்கட்கு இலங்கையில் தங்களுக்கு எதுவித சொந்தமும் உடமையும் இல்லையென்ற உணர்ச்சி உண்டாவது இயற்கையே அதே சமயத்தில் மேற்படி புத்தகங்களைப் படிக்கும் சிங்கள மாணவ மாணவிகள் இலங்கை தங்களுக்கே சொந்தமானதென்னும் எண்ணம் வலுப்பெறுகிறது. என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது. இந்த உணர்ச்சிக்கு எதிரில் சரித்திர குடியியல் நூல்களுக்கு எதிரில் தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் வந்தேறு குடிகளாகவும் தங்கள் தாயகம் இந்தியாவிலுள்ள தமிழ்நாடு என்று எண்ணத் தலைப்படுகிறது. இது தப்பானது தவறானது என்பதுதான் என் பேச்சின் நோக்கம்.

இன்று காணும் இலங்கைத்தீவும் அதைச் சுற்றியுள்ள கடலின் பெரும்பரந்த நிலப்பரப்புத்தான் தமிழனின் தாயகம். இன்று கூறும் (இந்தியாவில்) தமிழ்நாடு சேய்நாடு வரலாற்றிலே இம்முடிவுக்கு ஆயிரக்கணக்கான சான்றுகள் உண்டு.

இலங்கையின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் முன் உலகவரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. முதன்முதலாகத் தோன்றிய மண்மேடு உலகம் லெமூரியா குமரிக்கண்டம் என்று பெயரோடு விளங்கிற்று. அசைவனவும் அசையாதவையுமாகிய ஆதி உயிர்கள் அந்நிலத்தில்தான் தோன்றின.

அந்நிலப்பரப்பு இன்றைய உலகில் கிழக்கே அவுஸ்ரேலியாவிலிருந்து மேற்கு ஆபிரிக்காக் கண்டம் வரை பரந்து கிடந்தது. அடிக்கடி நேர்ந்த கடற்கோள்களினால் அப்பெரும் நிலப்பரப்பு சிதறியும் நீருள் மூழ்கியும் போயிற்று. அத்தோடு குமரிக்கண்டம் என்னும் பெயரும் மறைந்து மடகாஸ்கார்இ ஜாவாஇ இலங்கைஇ இந்தியாஇ சுமத்திராஇ கலிபோர்னியாஇ அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் தோன்றின. ஆனால் அந்த ஆதி நிலப்பரப்பில் நாகரீகத்தோடு வாழ்ந்த ஆதிமனிதன்தான் தமிழன். அவன் பேசிய மொழி தமிழ் என்ற செய்தியும் கிடைக்கிறது.

"பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்து குமரிக்கோட்டம் கொடுங்கடல் கொள்ள"

என்னும் சிலப்பதிகார அடிகள் இன்று நாம் காணும் குமரிமுனைக்குத் தெற்கே குமரிமலை என்றொரு மலையும் பஃறுளியாறு என்றொரு ஆறும் பல அடுக்கு மலைத் தொடர்களையும் கொண்ட நிலப்பரப்பும் இருந்த தென்னும் உண்மையையும் தருகின்றன.

சிலப்பதிகாரத்திலே வரும் மாடலன் என்பான் குமரியாற்றிலே நீராடினான் என்றும் காணமுடிகிறது. அந்த நிலப்பரப்பு தமிழகத்தின் (லெமூரியா) ஒருபகுதி மட்டுமல்ல தமிழினமும் தமிழ்

தொடர்ச்சி பக்கம்..15




# இப்படியும் ஒரு காலம் நிலவியது : கதை— 12

# ஹங்குறான்கட்டை மீராசாஹிப்

# கடலோடு இணைய எனக்கு வழிகாட்டிய வாய்க்கால்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள் - 12)*



Mark Anthony Fernando Prof. S. Maunaguru

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான்கற்ற 1961-1965 வரையுள்ள அந்தப்பழைய காலத்தில்என்னுடன் படித்தஇஸ்லாமிய மாணவர்களுள் நினைவில்பதிந்து நிற்பவர்மீறாசாஹிப். 1965க்குப்பின் அவரைநான் இன்றுவரைசந்திக்கவில்லை. இப்போது இருக்கிறாரா இல்லையாஎன்பதும் தெரியவில்லை. அவர் கங்குறாங்கட்டையை சேர்ந்தவர். அவரது சிவந்தநிறமும் தமிழ்ச்சொற்களை அவர் அழகாக இன்னொரு விதமாக உச்சரித்துப்பேசும் அந்தப் பேச்சுத் தமிழும் இன்னும் மறக்கவில்லை. அது ஹங்குறான்கட்டையில் இஸ்லாமியர் தமிழ் பேசும் பாணி, அழகான பாணி.

பளிச்சென்ற அவரது வெள்ளைப் பல் சிரிப்பு அவரது அடையாளம்.

அவர் எனக்கு வகுப்பில் நண்பரானார், கலை உரையாடல்கள் இருவரையும் நெருக்கின.

பரஸ்பரம் ஒருரை ஒருவர் புரிந்து கொண்டோம். அவர் நன்றாகச் சிங்களம் பேசுவார். சிங்கள இலக்கியங்களிலும் அவருக்குப் பரிச்சியம் இருந்து. அவர் வெகுலாவகமாகச் சிங்களம் பேசுவது எனக்கு பெரிய ஆச்சரியம் தந்தது.

நான் 1960 களில் பல்கலைக் கழகம் போன அக்காலத்தில் 1956 /60 களில் மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சி நடத்திய உணர்ச்சிகரமான தமிழ்ப் போராட்டங்களில் முக்கிய பங்கெடுத்து தமிழுணர்ச்சி மீதூரப்பெற்றிருந்தேன். அப்போது எனக்குப் பதினெட்டு வயது. சிங்கள மக்களுக்கெதிரான எதிர்ப்பு உணர்ச்சி, உடல், உள்ளம், நாடி, நரம்பெல்லாம் எனக்குள் நிறைந்திருந்த காலம்.

கூத்து நாடகம் கலை என நான் பேசுவதைக் கேட்ட நண்பர் மீராசாஹிப் நீங்கள் சரத் சந்திராவைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? எனக்கேட்டார்.

அப்பெயர் எனக்குப் புதிதாக இருந்தது.

இல்லையே என்றேன். எனக்கு அப்போது சரத் சந்திராவையோ வேறு எந்தச் சிங்களக் கலைஞர்களையோ நாடகங்களையோ தெரியவே தெரியாது.

சரத் சந்திரா பற்றி எனக்கு நீண்டதோர் விளக்கம் தந்தார் மீராசாஹிப். சரத் சந்திரா தனது பெயரைச் சரத் சந்திரா என மாற்றியமை, அந்நாளில் வங்காளம் சென்று ரவீந்திரநாத் தாகூரின் சாந்தி நிகேதனத்தில் இந்துஸ்தானி இசை பயின்றமை, அவரது சிங்கள, பாளி மொழிப்புலமை, நாடகத்தில் அவரது செயற்பாடு என்பனவற்றை மீறா சாஹிப் எனக்கு விளக்கினார். சிங்கள பாரம்பரிய நாடக நடன வடிவங்களான தொவில், நடனம் கோலம் சொக்கரி நாடகம் நூர்த்தி ஆகியவற்றின் அடியாக அவர் இலங்கைக்கேயான தேசிய நாடகத்தை உருவாக்கிக்கொண்டிருப்பதாக் கூறினார், அதனடியாக அவர் உருவாக்கிய இரண்டு நாடகங்களான மனமே சிங்கபாகு பற்றியும் விளக்கினார். இவற்றைப் பற்றி மணிக்கணக்காக இன்று பேசும் நான் முதன்முதலாக மீறா சாஹிப் மூலம் அவற்றைக் கேள்விப்படுகிறேன்.

சரத் சந்திராவின் இந்த இரு நாடகமான



Prof. E. R. Sarachchandra Prof. S. Vidyanandan

மனமேயும் சிங்கபாகுவும். மனித உணர்வுகளை மனப்போராட்டங்களை அதிகம் அழுத்துபவை என்று கூறி ஓர் விளக்கம் தந்தார். முதன் முதலில் என் மனதில் சரத் சந்திராபற்றியும் அவரது மனமே சிங்கபாகு பற்றியதுமான விதைகளை விதைத்தவர் இந்த மீரா சாஹிப்தான்

ஒரு நாள் மீறா சாஹிப் என்னிடம் சிங்கபாகு விரைவில் நமது திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது, அதற்கான ஒத்திகைகள் இங்கு நடக்கின்றன. சரத் சந்திரா நடத்துகிறார் பார்க்க வருகிறீரா?எனக் கேட்டார்.

மறு நாள் பின்னேரம் மீறாசாஹிப்புடன் ஒத்திகை நடத்தும் இடம் சென்றேன். அது ஓர் பெரிய வகுப்பறை, மிக வசதியான வகுப்பறை சிங்கபாகு ஒத்திகை நடை பெறுகிறது. வகுப்பறையின் ஒரு புறத்தில் சரத்சந்திரா சித்தாருடன் அமர்ந்திருக்கிறார். மறு புறம் ஹார்மோனிய மத்தளக் கலைஞர்கள் அமர்ந்திருக்கிறார்கள். இலங்கைக்கான ஒரு நாடக வடிவம் தேடி உலகெல்லாம் பயணம் செய்து பெற்ற அறிவுகொண்டு மனமே நாடகம் தயாரித்தவர் இவரா? ஆச்சரியத்துடன் அவரைப்பார்க்கிறேன். தமிழ் மக்கள், இஸ்லாமிய மக்கள் மீதும் அவர்களின் பண்பாடு கலைமீது அக்கறையும் கரிசனையும் ஆர்வமும் கொண்டவர் சரத் சந்திரா என்று மேலதிக விளக்கமும் தருகிறார் மீறாசாஹிப்.

ஒத்திகையில் சிங்கத்திற்கு மார்க் அன்ரனி நடித்துக்கொண்டிருந்தார். காட்டுக்குச் சென்ற சிங்கம் திரும்பி வருகிறது குகையின் கற்கதவு திறந்திருக்கிறது. தன்னால் மாத்திரமே புரட்டக்கூடிய இந்தக் கற்கதவை யார் திறந்தார். குகைக்குள் இருந்த பிரியமான மகனான சிங்கபாகுவையும் சிங்க சீவலியையும் காணவில்லை 'கல்லென வல லா ஹந்துறு கல லா சிங்கபா சிங்கபா' என மகனைக் காணாமல் உருகிப் பாடுகிறது சிங்கம்.



தன் மகன் மீதும் மகள் சிங்க சீவலி மீதும் மஹா பாசம் கொண்ட து இந்தச் சிங்கம். பாடலின் உருக்கம் மனதை வசீகரிக்கிறது.

இந்நாடகத்தில் சிங்கமாக நடித்த மார்க் அந்தனி எனக்கு அறிமுகமானார். பின்னர் நண்பருமானார். இன்னும் சில சிங்கள மாணவர்களும் அறிமுகமாகினர், சரத் சந்திராவுக்கருகில் நாம் செல்லவில்லை தூர இருந்து தரிசித்துவிட்டுத் திரும்பி விடுகிறோம் ஒரு வகைப் பயம் பக்தி.

மறு நாள் இரவு திறந்த வெளி அரங்கில் சிங்கபாகு நாடகம் மேடையிடப்படுகிறது. இப்போது அதற்குப் பெயர் சரத் சந்திரா திறந்த வெளி அரங்கு. அன்று பின்னேரம் 6.00 மணிக்கு என் அறைக்கு வந்த மீறாசாஹிப் என்னை அழைத்துகொண்டு அங்கு செல்கிறார், அன்றைய பெண்கள் விடுதியான ஹில்டா அபயசேகரா விடுதியின் அருகில் அம்மேடை அமைந்துள்ளது. அது ஆயிரக்கணக்கானோர் அமரும் படிக்கட்டு அரங்கு. நாடகம் ஆரம்பமாகிறது, எனக்குச் சிங்களம் ஒன்றுமே விளங்காது எனக்கு அருகில் இருந்த மீறாசாஹிப் பாத்திரங்கள் பாடும் ஒவ்வொரு பாடலின் வசனத்தின் கருத்துகளை மொழி பெயர்த்துக்கொண்டிருந்தார். மொழி பெயர்ப்பு என்னைச் சிங்கபாகுவில் ஊறவைத்து விடுகிற்து. அதனை விட அதன் இசை, பாடும் முறை, சில ஆடல் அசைவுகள் எமது கூத்தை அண்மியனவாகவும் இருந்தன.

அதில் ஒரு கட்டம் மிக உருக்கமான கட்டம் தன்னைப் பிரிந்து சென்ற மகனான சிங்கபாகுவை அது சந்திக்கிறது, அவனோ சிங்கத்தைக் கொல்ல வந்திருக்கிறான். "மகனே மகனே நான் உன்னில் மிகுந்த பிரியம் வைத்திருக்கிறேனடா என்னுடன் வந்து விடடா" என்று மகனைக் கெஞ்சுகிறது சிங்கம்.

தகப்பனுக்கும் மகனுக்கும் நடக்கும் உரையாடலையும் சிங்கத்தின் பாசம் மிகுந்த உணர்ச்சிகர வரிகளையும் எனக்கு மொழி பெயர்த்துக்கொண்டு வந்த மீறாசாஹிப்பின் குரல் கம்முகிறது. அவரைக்கவனித்தேன். அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிகிறது. விம்மத் தொடங்கி விட்டார். இப்படி ஒரு ரசிகரா? மீராசாஹிப் என் மனதில் உயர்ந்து விட்டார். நாடகம் என்னை வெகுவாக் கவர்ந்து விட்டது. அன்றிரவு முழுவதும் சிங்கபாகு நாடக நினைவுடந்தான் தூங்கினேன்.

நான் சரத் சந்திராவின் பரம ரசிகனாகவும் ஆகிவிட்டேன். போட்டால் இவரைப்போல அல்லவா நாடகம் போட வேண்டும் என எண்ணினேன். அவர் எனக்கோர் மானசீகக் குருவுமானார்.

பின்னாளில் பேராசிரியர் வித்தியானந்தன் கூத்துகளை மீளுருவாக்கியபோது சரத் சந்திராவின் உதவிகள் வித்தியானந்தனுக்குக் கிடைத்தன். சில ஒத்திகைகளுக்கும் சரத்சந்திரா வந்துள்ளார். அந்நாடகங்களில் பிரதான வேடங்கள் தாங்கியமையினால் நான் சரத்சந்திராவுக்கு நன்கு அறிமுகமாகியதுடன் அவரது மிக நெருக்கமான மாணவனும் சீடனுமானேன். அவர் இறக்கும் வரை அந்த உறவு ஓர் தந்தை மகன் உறவாகத் தொடர்ந்தது அதனால் நான் பெற்றவை அநேகம்.

அப்பெரும் நாடக மேதைக் கடலுடன் இந்தச் சிற்றாறு சென்று இணைய ஒரு சிறு வாய்க்காலாக நின்றவரே இந்த மீராசாஹிப். சரத் சந்திரக் கடலை அடைய வழிகாட்டி விட்ட ஹங்குறான்கட்டை மீராசாஹிப்பை எப்படி மறப்பேன்?. அது வாய்க்கால் அல்ல என் மனதில் இன்றும் நிறைந்து நிற்கும் பேருரு. யாரோ ஒருவர் நம் வாழ்வின் திருப்புமுனைக்கு தம்மை அறியாமலெயே கராணமாகி விடுகிறார்கள். என் கலை வாழ்வில் அப்படி ஒரு திருப்புமுனையே இந்த மீறாசாஹிப். நான் இப்போதும் நாடகங்கள் தயாரிக்கையில் அவை வெற்றி கரமாக மேடையேறியபின் மகிழ்ச்சியுடன் அன்றிரவு உறங்குகையில் அச்சிறு வாய்க்காலான கங்குறான்கட்டை மீறாசாஹிப்பின் பளிச்சென்ற வெள்ளைப் பல் சிரிப்பும், சிங்கபாகு பார்த்தபோது அவரது கண்களிலிருந்து வழிந்த ரசிக கண்ணீரும் அவரது இஸ்லாமிய அழகு தமிழும் வந்து வந்து செல்லும்.

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா

குடித்தொகைப் பிறப்புரிமையியல் (population genetics)

ஹாடி – வைன்டபேர்க் சமநிலை (Hardy – Weinberg Equilibrium)
ஒரு குறிப்பிட்ட இயல்புக்குரிய / பிறப்புரிமையியல்புக்குரிய தானத்திற்குச் சார்பாக ஒரு குடித்தொகை கூர்ப்படைந்து கொண்டிருக்கின்றதா என்பதை மதிப்பீடு செய்வதற்கு ஹாடி-வைன்பேர்க் சமநிலை பயன்படுத்தப்படுகின்றது. ஒரு குடித்தொகையிலுள்ள ஒரு இயல்பின் பிறப்புரிமையமைக்குரிய கட்டமைப்பு அந்த பிறப்புரிமையமைப்பிற்குரிய தானத்தில் கூர்ப்படைந்து கொண்டிருக்காவிடில், அது மாற்றமடையாமல் தங்கிவிடுகின்றது. ஆகவே ஒரு குடித்தொகையின் ஒரு இயல்புக்கான எதிர்வுகூறலப்பட்ட தரவு, அதே குடித்தெரகயில் இருந்து பெறப்பட்ட உண்மையான தரவுடன் ஒப்பிடப்படலாம் மேலே கூறப்பட்ட இரு தரவுகளினதும் ஒப்பீடு, கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயல்பு சார்பாக கூர்ப்படைகின்றதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவலாம்.

ஹாடி-வைன்பேர்க் சமநிலைத் தத்துவம் (Hardy – Weinberg Euilibrium principle)
1908 ஆம் ஆண்டு பிரித்தானிய கணிதவியலாளரான G.H.Hardy மற்றும் ஜேர்மனிய வைத்திய நிபுணரான W.Weinberg ஆகிய இருவரும், கூர்ப்படையாமல் இருக்கும் ஒரு குடித்தொகையில், எதிருரு மற்றும் பிறப்புரிமையமைப்பு மீடிறன்கள் பரம்பரையிலிருந்து பரம்பரைக்கு மாறிலியாக அமைந்து காணப்படும் எனத் தனித்தனியாகக் காண்பித்தனர். இது இப்பொழுது குடித்தொகைப் பிறப்புரிமையியலில் ஹாடி-வைன்பேர்க் தத்துவம் எனப்படும் ஒரு முக்கியமான எண்ணக்கருவாகக் கருதப்படுகின்றது.

எதிருரு மற்றும் பிறப்புரிமையமைப்பு மீடிறன்கள் அடுத்தடுத்துத் தொடரும் சந்திகளில் மாற்றமடைந்துள்ளனவா என்பதைத் தீர்மானிப்பதற்கு, குடித்தொகை ஒன்றில் நிகழக்கூடிய சாத்தியமான எல்லா இனங்கலத்தல்களிலும் காணப்படக்கூடிய எதிருருக்களைக் கவனத்திற்கொண்டு ஓர் புன்னற் சதுரம் வரையப்படலாம்.

ஹாடி-வைன்பேர்க் சமநிலையைத் தீர்மானிப்பதற்கு பின்வரும் உதாரணம் பயண்படத்தப்படலாம்.

பூவின் நிறத்திற்கான எதிருருக்களுக்கு நிறைவில் ஆட்சியைக் காண்பிக்கும் ஒரு வான்வகைப் பூக்குந் தாவரக்குடித்தொகை, அவற்றின் பிறப்புரிமையமைப்புக்களைக் காண்பிக்கும் தெளிவான தோற்றவமைப்புக்களை உடையது.

அதாவது,
CR எதிருருவுக்கான சமநுகமுடைய (CRCR) தாவரங்கள் சிவப்பு நிறப்பொருளை உற்பத்திபண்ணி சிவப்பு நிறப்பூக்களை உண்டாக்குகின்றன. CW எதிருருவுக்கு சமநுகமுடைய (CWCW) தாவரங்கள் வெண்ணிறப்பூக்களை உண்டாக்குகின்றன. இதரநுகமுடைய தாவரங்கள் (CRCW சொற்பளவு சிவப்பு நிறப்பொருளை உற்பத்திபண்ணி இளஞ்சிவப்பு பூக்களை உண்டாக்குகின்றன.

500 பூக்களின் குடித்தொரகயில் 800 CR எதிருருக்களும் 200 CW எதிருருக்களும் இருந்தன. மேற்கூறப்பட்ட தாவரத்தினது பூவின் நிறமானது ஒரு சோடி நிறவுருக்களால் தீர்மானிக்கப்படுவதால், அவற்றினது அல்லிகளின் நிறப்பொருளாக்கத்துக்கு 500 பூக்களும் 1000 எதிருருக்களைக் கொண்டு காணப்படலாம்.

ஆகவே,

CR எதிருருக்களின் எதிருரு மீடிறன் (P)=800/1000=0.8
CW எதிருருக்களின் எதிருரு மீடிறன் (q)=200/1000=0.2

புணரிகள் எழுந்தமானமாகத் தோற்றுவிக்கப்பட்டால், ஒரு முட்டை அல்லது விந்து CR ஐ அல்லது CW வைக் கொண்டிருக்கும் நிகழ்தகவாபனது, குடித்தொகையில் இந்த எதிருரு ஒவ்வொன்றுக்குமான மீடிறனுக்குச் சமமாக இருக்கும். இவ்வாறு, ஒவ்வொரு முட்டையும் ஒரு CR எதிருருவைக் கொண்டிருக்கும் வாய்ப்பு 80% அகவும், ஒரு CW எதிருருவைக் கொண்டிருக்கும் வாய்ப்பு 20% ஆகவும் உள்ளது. ஒவ்வொரு விந்தும் இதனையே கொண்டிருக்கும் வாய்ப்பு உள்ளது. எழுந்தமானமான கருக்கட்டலின்போது, புணரிகள் எழுந்தமானமுள்ள முறையில் சேர்க்கையடைகின்றன. ஆகவே ஒவ்வொரு பிறப்புரிமைக்குரிய சேர்க்கையின் நிகழ்தகவைக் கணிப்பதற்கு பெருக்கல் விதி பிரயோகிக்கப்படலாம்.

ஹாடி-வைன்பேர்க் சமநிலையின் பிகாரணம், ஒரு இயல்பானது இரண்டு எதிருருக்களால் தீர்மானிக்கப்படுமானால், மூன்று பிறப்புரிமையமைப்புக்களும் பின்வரும் விகிதங்களில் தோன்றும்.

p2 = ஆட்சியான சமநுகங்களின் மீடிறன்
q2 = பின்னிடைவான சமநுகங்களின் மீடிறன்
2pq = இதரநுகங்களின் மீடிறன்

இரண்டு CR எதிருருக்கள் ஒன்றுசேர்ந்து வரும்பொழுது நிகழ்தகவு, p  p= p2 = 0.8 0.64 = 0.8 
எனவே வழித்தோன்றலில் CRCR பிறப்புரிமையமைப்பிற்கான விகிதம் = 64%
இரண்டு CW எதிருருக்கள் ஒன்றுசேர்ந்து வரும்பொழுது

தொடர்ச்சி... (பக்கம் -14)

## கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

### கலப்புப் பின்னங்களைக் கூட்டலும் கழித்தலும்

முறை I

முறை II (முறைமையில்லாப் பின்னமாக மாற்றி கூட்டுதல்)

(1) முறை I

$$2\frac{1}{5}+1\frac{2}{5}$$
$$=2+1+\frac{1}{5}+\frac{2}{5}$$
$$=3+\frac{3}{5}$$
$$=3\frac{3}{5}$$

முறை II

$$2\frac{1}{5}+1\frac{2}{5}$$
$$=\frac{11}{5}+\frac{7}{5}$$
$$=\frac{18}{5}$$
$$=3\frac{3}{5}$$

(2) முறை I

$$2\frac{1}{2}+1\frac{1}{3}$$
$$=2+1+\frac{1}{2}+\frac{1}{3}$$
$$=3+\frac{1\times3}{2\times3}+\frac{1\times2}{3\times2}$$
$$=3+\frac{3}{6}+\frac{2}{6}$$
$$=3\frac{5}{6}$$

முறை II

$$2\frac{1}{2}+1\frac{1}{3}$$
$$=\frac{5}{2}+\frac{4}{3}$$
$$=\frac{5\times3}{2\times3}+\frac{4\times2}{3\times2}$$
$$=\frac{15}{6}+\frac{8}{6}$$
$$=\frac{28}{6}$$
$$=3\frac{5}{6}$$

(3) முறை I

$$2\frac{1}{6}-1\frac{1}{8}$$
$$=2-1+\frac{1}{6}-\frac{1}{8}$$
$$=1+\frac{1\times4}{6\times4}-\frac{1\times3}{8\times3}$$
$$=1+\frac{4}{24}-\frac{3}{24}$$
$$=1\frac{1}{24}$$

முறை II

$$2\frac{1}{6}-1\frac{1}{8}$$
$$=\frac{13}{6}-\frac{9}{8}$$
$$=\frac{13\times4}{6\times4}-\frac{9\times3}{8\times3}$$
$$=\frac{52}{24}-\frac{27}{24}$$
$$=\frac{25}{24}$$
$$=1\frac{1}{24}$$

கீழ்வரும் வினாக்களை முறை I இல் செய்து பார்க்குக.

(4)
$$8\frac{1}{3}+7\frac{2}{9}$$
$$=\frac{25}{3}+\frac{65}{9}$$
$$=\frac{25\times3}{2\times3}+\frac{65}{9}$$
$$=\frac{75}{9}+\frac{65}{9}$$
$$=\frac{140}{9}$$
$$=15\frac{5}{9}$$

(5)
$$2\frac{3}{5}-1\frac{3}{4}$$
$$=\frac{13}{5}-\frac{7}{4}$$
$$=\frac{13\times4}{5\times4}-\frac{7\times5}{4\times5}$$
$$=\frac{52}{20}-\frac{35}{20}$$
$$=\frac{17}{20}$$

பக்க அனுசரணை

IN LUMINE TUO LUMEN

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 50

### க.பொ.த. (சா/த) – தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

பொருத்தமற்ற உதாரணம் இடம்பெறுகின்ற சொற்றொகுதியினைக் கொண்ட விடையின் கீழே கோடிடுக.

1. (1) அகச்சுட்டு – அவன், இது, எது
   (2) புறச்சுட்டு - இவ்வீடு, அம்மனிதன், உவ்வீடு
   (3) உடனிலை மெய்ம்மயக்கம் - காற்று, அம்மா, பிள்ளை
   (4) வேற்றுநிலை மெய்ம்மயக்கம் - தங்கை சிற்பம், மஞ்சு

2. (1) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - கயிறு, மிளகு, கடுகு
   (2) மென்றொடர்க் குற்றியலுகரம் - மஞ்சு, நுங்கு, பந்து
   (3) நெடிற்றொடர்க் குற்றியலுகரம் - ஆடு, காடு, கூவு
   (4) இடைத்தொடர்க் குற்றியலுகரம் - மார்பு, சார்பு, வால்பு

3. (1) பகுபதம் - ஊரன், ஓடி, கூனி
   (2) பகாப்பதம் - மண், உண், திருந்துதல்
   (3) இடைநிலை – த், ட், கின்று, ப்
   (4) சாரியை – அன், இன், அத்து

4. (1) பொருட்பெயர் - மேசை, மீன், புத்தகம்
   (2) இடப்பெயர் - நாடு, தீவு, மண்டபம்
   (3) காலப்பெயர் - நாள், கோடை, தோடை
   (4) சினைப்பெயர் - இதழ், சிறகு, கொண்டை

5. (1) தனிவினை – வருகின்றான், போவான், எழுதினாள்
   (2) கூட்டுவினை – தூங்கவைத்தான், தட்டிக்கேட்டான், சொல்லிப்பார்த்தான்
   (3) முற்றுவினை – ஓடியது, அழுதார்கள், சிதறின
   (4) எச்சவினை – வந்த, அந்த, நொந்த

6. (1) மாற்றுப்பெயர் - அவன், அது, நீ
   (2) ஆக்கப்பெயர் - நோயாளி, முயற்சி, எழுத்து
   (3) தொழிற்பெயர் - ஓட்டம், ஓடுதல், ஓடியமை
   (4) கூட்டுப்பெயர் - கடற்கரை, நீர்வீழ்ச்சி, வகுப்பறை

7. (1) பெயரெச்ச விகுதி – அ, உம், உ
   (2) ஆக்கப்பெயர் விகுதி – அல், கி, ச்சி
   (3) தொழிற்பெயர் விகுதி – தல், மை, த்தல்
   (4) பன்மை விகுதி – அர், கள், மார்

8. (1) பெயரடை – அழகான, வெள்ளை, தெளிவான
   (2) வினையடை – அறிவுள்ள வேகமான, அன்பால்
   (3) எதிர்மறை வினை – வரவில்லை, இகழேல், செய்யமாட்டார்
   (4) உடன்பாட்டு வினை – எழும்பு, பேசினாள், கேட்டான்

9. (1) பண்புத்தொகை – முழுநிலவு, பச்சைக்கிளி, சதுரப்பலகை
   (2) உம்மைத்தொகை – பிள்ளைகுட்டிகள், ஒன்றேகால், சோறுகறி
   (3) உவமைத்தொகை – முத்துப்பல், இரும்புச்சங்கிலி, பால்நிலவு
   (4) வினைத்தொகை – ஏவகணை, குடிநீர், எறிகயிறு

10. (1) மரூஉ – அருமந்த, துரொட்டி, வாணாள்
    (2) இலக்கணமுடையது – சோழநாடு, சுருதி, அருமருந்தன்ன
    (3) இலக்கணப்போலி – முன்றில், புறநகர், வாயில்
    (4) கூட்டெழுத்து – ஐ, மொ, ஔ


11. (1) அடுக்கிடுக்குத்தொடர் - கன்னங்கரிய, நட்டநடு, தன்னந்தனி
    (2) அடுக்குத்தொடர் - பெரியபெரிய, வரவர, சொல்லச்சொல்ல
    (3) இணைமொழி – அக்கம்பக்கம், ஏடாகூடம், சந்துபொந்து
    (4) இரட்டைக்கிளவி – மடமட, படபட, கடகட

12. (1) பெயர்ச் சொல் - பாடசாலை, ஆட்டம், கிளி
    (2) உரிச்சொல் - சால, உறு, நனி
    (3) கலைச்சொல் - எண்மானம், பாதீடு, இணையம்
    (4) வினைச்சொல் - எழுதுவான், எழுதி, எழுதுதல்

13. (1) எழுவாய்த் தொடர் - தம்பி வந்தான், சுமதி பேசினாள், சேவல் கூவியது
    (2) வினையெச்சத் தொடர் - பாடி மகிழ்ந்தேன், ஓடித் திரிந்தேன், எழுதி வாசித்தேன்
    (3) பெயரெச்சத் தொடர் - பார்த்த படம், பார்த்துப்பேசு, விழுந்த கொசு
    (4) வேற்றுமைத் தொடர் - பாடலைப் பாடினேன், கல்லால் எறிந்தான், மேசையைத் துடைத்தான்

தொடர்ச்சி...

## விஞ்ஞானம்




ஹாடி-வைன்பேர்க் தத்துவம்

நிகழ்தகவு, q □ q = q2 =0.2 0.04 = 0.2 □
எனவே வழித்தோன்றலில் CWCW பிறப்புரிமையமைப்பிற்கான விகிதம் = 4%
CRCW இதரநுகங்கள் இரண்டு வழிகளில் தோன்றலாம்.

விந்தானது CR எதிருருவையும் முட்டை CW எதிருருவையும் வழங்குமிடத்து, வழித்தோன்றலின் பெறுபேறாகத் தோன்றும் CRCW இதரநுகங்கள்
p□q=0.816%=0.16=0.2□
முட்டையானது CW எதிருருவையும் விந்து CR எதிருருவையும் வழங்குமிடத்து வழித்தோன்றலின் CRCW இதரநுகங்கள் q□p=0.216%=0.16=0.8□
இவ்வாறு வழித்தோன்றலில் இதரநுகத்தின் மொத்த மீடிறன்
pq+qp=2pq=0.16+=0.32 அல்லது 32%
மேலுள்ள உதாரணத்தில் மூன்று வகையான பிறப்புரிமையமைப்புக்கள் மாத்திரமே சாத்தியமானவையாகும். ஹாடி –வைன்பேர்க் சமநிலைக்கு நிபந்தனைகள் பொருத்தமான இருக்கும்பொழுது, அனைத்து மூன்று பிறப்புரிமையமைப்புக்களினதும் மொத்த மீடிறன்கள் 1 இற்குச் சமமாகின்றது. எனவே ஹாடி-வைன்பேர்க் சமநிலைக்கான சமன்பாடு பின்வருமாறு எழுதப்படலாம்.
p2+2pq=q2=1

ஹாடி-வைன்பேர்க் சமநிலைக்கான நிபந்தனைகள்
ஹாடி-வைன்பேர்க் அணுகுமுறையானது, கூர்ப்படைந்து கொண்டிருக்காததும், பின்வரும் நிபந்தனைப் பூர்த்திசெய்வதுமான ஒரு கருதுகோளுக்குரிய குடித்தொகையை விபரிக்கின்றது.
1. விகாரங்கள் இல்லாமை. விகாரங்களின் பெறுபேறாக எதிருருக்களில் மாற்றங்கள் தோன்றுகின்றன. நியூக்கிளியோடைட்டுக்கள் புகுத்தப்படுதல், அகற்றப்படுதல், அல்லது மாற்றீடுசெய்யப்படுதல் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இது திரிபடைந்த பரம்பரையலகுத் தடாகத்துக்கு (gene pool) இட்டுச் செல்லுகின்றது.
2. எழுந்தமானமான புணர்தல் நடைபெறுதல். தேர்வுக்குரிய நிலையை ஏற்படுத்தும் எவ்வித செல்வாக்கும் இன்றி இனக்கலப்பு எழுந்தமானமாக இடம்பெறுகின்றது. நெருங்கிய தனியன்களுக்கிடையிலான புணர்தல், பரம்பரையலகு மீடிறன்களை மாற்றமடையச் செய்யலாம்.
3. இயற்கைத் தேர்வு காணப்படாமை. வழித்தோன்றல்களினது எல்லாப் பிறப்புரிமையமைப்புக்களும் அவற்றின் வேறுபாடுகள், ஆற்றல்கள், மற்றும் சூழல் நிபந்தனைகள் சார்பின்றி தப்பிப்பிழைக்க எதிர்பார்க்கப்படுகின்றன. சில பிறப்புரிமையமைப்புகளின் தப்பிப்பிழைத்தலில் உள்ள மாறல்களும் இனப்பெருக்கமும் எதிருருக்களின் மீடிறனை மாற்றலாம்.
4. குடித்தொகைப்பருமன் மிகப்பெரிதாக இருத்தல். சிறிய குடித்தொகைகளில் அங்கிகளின் இறப்பு அல்லது வளமற்ற தன்மை காரணமாக குறிப்பிட்ட பிறப்புரிமையமைப்புகள் மறைந்து போகலாம். ஆகவே குடித்தொகை பெரியதாக இருந்தால் அது Hardy-Weinberg கூடுதல் வசதியை வழங்கும்.
5. குடிவரவு அல்லது குடியகல்வு நடைபெறாமை. குடித்தொகையினுள் நுழையும் அல்லது வெளியேறும் தனியன்கள் புதிய பரம்பரையலகுகள் தோன்றுவதையும் இருக்கின்ற பரம்பரையலகுகள் மறைந்து போவதையும் ஏற்படுத்தலாம். இது எதிருரு மீடிறன்களை மாற்றக்கூடும்.
இயற்கையில், குறிப்பிட்ட சில பரம்பரையலகுத் தானங்களைத் தவிர, பெரும்பான்மையான குடித்தொகைகள் ஹாடி-வைன்பேர்க் சமநிலையிலிருந்து விலகிச் செல்லுகின்றன. எனவே கூர்ப்படையாமலிருக்கும் குடித்தொகையில் எதிர்வுகூறப்பட்டது போன்று மெதுவாகக் கூர்ப்படைந்துகொண்டிருக்கும் குடித்தொகைகளும் Hardy-Weinberg சமநிலையிலிருந்து விலகிச்செல்லாமல் இருக்கலாம்.

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## இமாலய சாதனை...

நாகரீகமும் தழைத்தோங்கிய பூபாகம் அந்நிலப்பரப்பிலே தலைச்சங்கம் கூடிய தென்மதுரையும் இடைச்சங்கம் கூடிய கபாடபுரமும் இருந்தன. மணிமேகலையில் வரும் காவிரிப்பூம் பட்டணமும் அப்பகுதியிலே இருந்தன.

நூலார் 10 வடமொழியாக வகுத்த உலக நடுவரையை பூமத்திய ரேகையை இலங்கையினுடாகவே கணித்திருக்கிறார்கள். இன்று மேற்படி நடுவரை இலங்கையினூடாகச் செல்லாமல் இலங்கைக்கு தெற்கே கடலின் மேல் செல்வதிலிருந்து இன்று நடுவரை செல்லும் பகுதிவரையிலும் இலங்கை பரந்து கிடந்தது. கடற் கோளினால் இலங்கையும் சுருங்கிற்றென அறிய முடிகிறது.

மேலும் தென்னிந்தியாவைப்பற்றி எழுத முற்பட்ட பேரறிஞர் மெகஸ்தனிஸ் இலங்கையை தப்பிரபேனே என நாமம் இட்டு அழைப்பதோடு அது இந்தியாவினின்று ஓர் ஆற்றினால் பிரிக்கப்பட்டுள்ளதென்றும் கூறுகிறார். இதிலிருந்து தாமிரபரணி என்ற பொருநையாறு கடலுக்குள் மூழ்கிய நிலத்தின் வழியாக இலங்கையினூடாக சென்றிருக்க வேண்டுமென்று நிலநூல் (பூமிசாத்திரம்) வல்லுனர்கள் அறுதியிட்டுக் கூறுகிறார்கள்.

இலங்கை தோன்றுவதற்குமுன் அதையும் அடக்கியதாகக் கொண்டிருந்த லெமூரியா நிலப்பரப்பிலும் வாழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பது ஐயந்திரிபுகளுக்கிடமின்றி பலரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

ஆகவே விஜயன் காலத்திற்கு முன் இலங்கையின் சரித்திரம் இருள் சூழ்ந்ததாகக் கிடக்கிறதென்று காட்டும் காரணம் ஒப்புக்கொள்ளக் கூடியதல்ல. அது வேண்டும் என்று கூறும் சப்பைக்கட்டுவாதமாகும். சரித்திர உண்மைக்கு கரிபூசும் நடவடிக்கை. ஒரு இனத்திற்கு இந்நாடு சொந்தமானதென உறுதிப்படுத்த கையாளப்பட்ட சதி தந்திரமும் சரித்திர மோசடியுமாகும்.

மனிதன் உலகில் தோன்றி வாழ்ந்த கதையைச் சொல்வது சரித்திரம். மனிதனுடைய கதை மிக மிக நீண்ட சம்பவங்களின் தொகுப்பு இதிகாசகாலம் ஏற்படுமுன் உலகில் வேதகாலம் வழங்கி வந்தது. வேதகாலத்து நிகழ்ச்சிகளை முற்றாக உலகம் ஒதுக்கிவிடத் தயாரில்லை. சரித்திர நிகழ்ச்சிகள்தான் வேதகாலச் சம்பவங்கள் அவற்றில் மனிதசக்திக்கு அப்பாற்பட்டவைகளை கற்பனைப் பகுதியில் தள்ளிவிட்டு மற்றவைகளை சரித்திரமாகக் கணிக்க வேண்டும்இ கருத வேண்டும்.

விஜயன் இந்நாட்டிற்கு வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன் இங்கு தமிழ்மக்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் வீடுதோறும்தமிழ் வீதிகளெங்கும் இனியதமிழ் இசையரங்குகள் இன்பத்தமிழ் அமைச்சர்கள் பேசியது இனியதமிழ் அரசசபையிலே நிலவியது எம் அன்னை மொழியாம் செந்தமிழ் குறைகளை அதிகாரிகள் வினவியது தமிழிலே குற்றப்பத்திரிகையை எழுதி வாசித்தது தமிழிலே நாட்டின் மூலைமுடுக்கெங்கும் முத்தமிழ் ஒலித்தது பட்டி தொட்டிகளெங்கும் பைந்தமிழ் பரிணமித்தது. கண்டி மலையிலிருந்து வீசிய காற்றிலும் கதிர்காமத்திலிருந்து தவழ்ந்து வந்த தென்றலிலும் கன்னித்தமிழின் வாடை அடித்தது. ஒரு காலத்தில் இவ் வண்ணம் விளங்கிய இலங்கை தமிழகத்தை தமிழகத்திலிருந்து புரட்சிக்கவிஞர் நம் கண்முன் நிறுத்துகிறார் பாருங்கள்.

தென்திசையைப் பார்க்கிறேன் என்ன சொல்வேன் என்றன் சிந்தனையெல்லாம் தோள்களெலாம் பூரிக்கும் அடடா! அன்றந்தலங்கையினை ஆண்டமறத்தமிழன் ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தோன் குன்றெடுக்கும் பெருந்தோழான் கொடை கொடுக்கும் கையான் குள்ள நரிச் செயல் செய்யும் கூட்டத்தின் குற்றம் என் தமிழர் மூதாதை! என்தமிழர் பெருமான் இராவணன் காண்! அவன் நாமம் இவ்வையம் அறியும்.

வரலாறு தெரிந்தோர் கவிஞர் கூறும் இலங்கையை வெறும் கற்பனை சரக்கென்று வாதிடமுனையார். இராவணன் அரக்கன் அசுரன் மனிதஉருவம் இல்லாதவன் என்றெல்லாம் நம்மில் பலர் எண்ணி இருந்தார்கள்.

ஒருகாலத்தில் இராவணன் சுதந்திர புருசன் தன்னொளி சேர் அகத்தான். அறவழி வாழ்ந்தோன். அதுமட்டுமல்லாது தமிழன் என்றும் அறிகிறோம்.

அகில உலகத்தின் பாராட்டுதலுக்குரிய ஜவஹர்லால் நேருவும் தம் மகளுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது வேதங்கள் எழுதப்பட்ட வேதகாலங்களுக்கு பிறகு இதிகாச காலம் வந்தது. மிகப்பெரிய வீரர்களின் கதையைப்பற்றி பெருங்காவியங்கள் இரண்டு எழுதப்பட்டமையினால் அதற்கு இதிகாச காலமென்று பெயர் வந்தது. இதிகாச காலத்தில் ஆரியர் விந்திய மலைக்கு வடக்கே வடஇந்தியா முழுவதும் பரவியிருந்தனர்.

(தொடரும்)

தொடர்ச்சி...

## பலாலியும்....

துரிதகதியில் அமைக்கப்பட்டது.

பலாலி விமான நிலையம் இராணுவத் தேவையை நிறைவு செய்யும் நோக்குடன் அமைக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் 1945 ஒகஸ்ட் மாதம் ஜப்பானியரின் சரணாகதியுடன் நிறைவு பெற்றது.

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்தது. பலாலி விமான நிலையம் சிவில் விமான நிலையமாக மாற்றம் பெற்றது.

அங்கு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் அலுவலகம், சுங்கத் திணைக்களத்தின் அலுவலகம் என்பன திறக்கப்பட்டது.

பலாலியிலிருந்து தமிழகத்தின் திருச்சி விமான நிலையத்திற்கு பிராந்திய விமான சேவை நடத்தப்பட்டது.

1976 ஆம் ஆண்டு எனது தந்தையார் தமிழகம் சென்ற போது பலாலி விமான நிலையத்தின் தென்னந்தோப்பில் நின்று நாம் வழியனுப்பி வைத்தது ஞாபகமாக உள்ளது.

1978 இல் நான் சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் மூன்றாம் வகுப்பு படித்த போது பலாலி விமான நிலையத்தைப் பார்வையிட பாடசாலையால் அழைத்துச் செல்லப்பட்டோம்.

அப்போது விமானத்தின் குசன் ஆசனங்களை நசித்து நசித்து ஆசையாகத் தொட்டுப் பார்த்தேன்.
1983 யூலையில் நாடெங்கும் பெரும் பிரளயம் ஏற்பட்டது. பலாலி விமான நிலையத்திலிருந்து சிவில் விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டன. முற்றாகவே இராணுவ மயமாகியது.

1984 ஆம் ஆண்டில் தமிழர் விடுதலை இயக்கங்கள் பலாலி உட்பட வடக்கின் படை முகாம்களிலிருந்து படையினர் வெளியேற முடியாதவாறு தாக்குதல் நடத்தினார்கள்.

விளைவு குண்டுவீச்சு விமானங்கள் கொழும்பிலிருந்து பலாலிக்கு வரத் தொடங்கின.

விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குதல் என்ற பெயரில் குண்டு வீச்சைக் குடா நாடெங்கும் நடத்த ஆரம்பித்தன.

போரில் விடுதலைப் புலிகள் ஏகப் பெரும் சக்தியாகிய போது அவர்கள் பலாலிப் படைத்தளத்தைக் கைப்பற்றுவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டனர்.

1987 இல் இலங்கை இந்திய அமைதி உடன்படிக்கையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் இந்தியாவிலிருந்து விமானம் மூலமாகப் பலாலிக்கு வந்தார்.

ஊரடங்கு நிலையை அறிவித்து புலிகள் அவரை அழைத்து வந்தார்கள்.

1996 மே மாதம் யாழ் குடாநாடு முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டில் வந்தது. தரைவழிப்பாதை தடைப்பட்டது.

அப்போது பலாலியிலிருந்து கொழும்பு இரத்மலானைக்கு பயணிகள் போக்குவரத்துக்காக விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.

2002 ஏப்பிரல் 08 இல் தரைவழிப்பாதை திறக்கப்பட்டது. அப்போது 4 வருடங்களுக்கு மேல் பலாலி கொழும்பு விமான சேவை மிகக் குறைந்தளவில் நடத்தப்பட்டது.

2006 ஒகஸ்ட் 11 இல் முகமாலையில் இறுதிப் போர் வெடித்தபோது மீண்டும் கப்பல்,விமானப் பயணங்கள் தொடங்கின.

2009 ஆம் ஆண்டின் இறுதியில் மீண்டும் தரைவழிப் பாதை திறக்கப்பட்டது.

ஆனாலும் மிகக் குறைந்த அளவில் பலாலியிலிருந்து கொழும்புக்கு விமானப் பயணங்கள் நடைபெற்று வருகின்றன.

தற்போது அரசாங்கம் பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்து வருகிறது.

இவ்வருட இறுதியில் பலாலியிலிருந்து தென்னிந்தியாவுக்கு விமான சேவை நடைபெற உள்ளது.

இலங்கையின் வரலாற்றில் இது ஒரு மைல் கல்லாக அமையப்போகிறது.

இது போல மட்டக்களப்பு, சீனன்குடா போன்ற விமான நிலையங்கள் விருத்தி செய்யப்படும் நிலையும் உருவாக உள்ளது.

போரின் நிறைவு புதியதொரு அபிவிருத்தி சகாப்தத்தை உருவாக்கிக் கொடுக்குமென மக்கள் ஆவலாக உள்ளனர்.

தொடர்ச்சி...

## மட்டக்களப்பு ...

குறித்துக் கேட்டதற்கு பதிலளித்த நல்லரத்தினம்,

"எல்லோரும் ஆதரவு தருகிறார்கள் மக்களின் ஒத்துழைப்பு கிடைக்காது போனால் நாம் செயற்படமுடியாது. அறிவாலய ஆரம்ப நிகழ்வில் பல ஆளுமை கொண்ட புத்திஜிவிகள் கலந்து கொண்டு தமது ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி எம்மை உற்சாகப் படுத்தினார்கள். இன்று வரையும் ஆதரவு வழங்கிகொண்டிருக்கிறார்கள். உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. நாளடைவில் உதவுவர்கள் முன்வரலாம் என்று நம்புகிறோம். இப்பணியினால் ஆத்ம திருப்தியடைகிறேன்' என்றார்.

தனது வருமானத்தில் ஒரு பகுதியை இதற்குச் செலவிடும் நல்லரத்தினம், புலம்பெயர் உறவுகள் தமக்கு உகந்த வகையில் தாயகத்தில் உள்ள உறவுகளுக்கு உதவ முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

நல்லரத்தினத்தின் தந்தையார் குளங்களைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் சூழலியலாளராக வர்ணிக்கப்படுபவர். அவர் குறித்த ஞாபகங்களை நினைவுகூர்ந்த நல்லரத்தினம்,

'அப்பா குளங்களின் பிரியர், நீர் வளத்தை பேணுவதில் வல்லவர். களங்கமில்லாதவர் எதுவாக இருந்தாலும் அதனை தளம்பல் இல்லாமல் செய்து முடிப்பார். குளங்களை தூர்வார்வதிலும் விவசாயத்திற்கு நீர் பாய்ச்சுவதிலும் அவருக்கு நிகர் அவர்தான். நீர் முகாமைத்துவம் தெரிந்தவர். பட்டறிவின் மூலம் இந்த அறிவும் ஆற்றலும் அவருக்கு வந்தது. பாவகொடிச்சேனை வாதகல்மடு என்ற இடத்தில் எனது தந்தையார் கட்டிய குளத்தை தற்பொழுது எனது சொந்தச் செலவில் புனரமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். 60 ஏக்கர் நீர்ப்பாசன வயல்களை கொண்டது. குளம் 15 ஏக்கர் விஸ்தீரணம் உடையது. அலையப்போடியார் குளம் அப்பா பெயரில் உள்ளது. குளங்கள் விவசாய செய்கை மற்றும் கால்நடைகள், பறவைகளின் தாகம் தீர்ப்பதற்கும் பயன்படுகிறது. இக்குளங்கள் அமைந்துள்ள இடம் பசுமையான பிரதேசம். சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய இடமாக அமைந்துள்ளதால் குளம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு மக்கள் போக்குவரத்து செய்யக்கூடிய வசதிகள் செய்யப்பட வேண்டும். மின்சார வசதி செய்யப்பட வேண்டும்' என்ற கோரிக்கையும் முன்வைக்கிறார் நல்லரத்தினம்.

AGNI PULAYAVELY INDUSTRIES

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 196,Trinco Road, Batticaloa